# கீதையின் ராதை



முத்துலட்சுமி ராகவன்

# கீதையின் ராதை

முத்துலட்சுமி ராகவன்

திருமகள் நிலையம்
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்
பழைய எண்:28, புதிய எண்:13,
சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை- 600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2011

© : ஆசிரியருக்கு

திருமகள் நிலையம் வெளியீடு

| | | |
|---|---|---|
| TITLE | : | GEETHAIYIN RATHAI |
| AUTHOR | | MUTHULAKSHMI RAGHAVAN |
| FIRST EDITION | | AUGUST - 2011 |
| PAPER | | 11.6 Book Print |
| TOTAL PAGES | | 104 |

Available at :
**THIRUMAGALNILAYAM**
Sucons Appartments
No. 13, Sivapragasam Street
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24342899, 24327696
Fax : 91-44-24341559
E-mail : enquiry@thirumagal nilayam.com
website:- www.thirumagalnilayam.com

**விலை ரூ. 45/-**

**திருமகள் நிலையம்**
சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்
எண். 13, சிவப்பிரகாசம் தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559

Typesetting : AMARAVATHI GRAPHICS
Chennai - 33. Cell : 9444169725

Printed by : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166,

# கீதையின் ராதை!

## 1

**வா**ழை மரங்கள் கட்டப்பட்டிருந்த அந்த திருமண மண்டபத்தின் வாசலில் தன் டிவிஎஸ் அப்பாச்சியை நிறுத்தி விட்டு இறங்கினான் யதுநந்தன். அவனை ஆச்சர்யத்துடன் பார்த்தபடி கூட இறங்கிய முரளி...

"ஏன்டா... எப்போதிலிருந்து இந்த பெரிசுகள் செய்யும் வேலைகளை எல்லாம் செய்ய ஆரம்பித்தாய்?" என்று விசாரித்தான்.

"கிண்டலா?" ஒரு மாதிரியான தொனியில் வினவினான் யதுநந்தன்.

"ஆமாம் என்கிறேன். அதுக்கு இப்ப என்னங்கிற?"

"எரிச்சலைக் கிளப்பாமல் பேசாமல் கூடவா... நானே கல்யாண மண்டபத்தை விசாரிக்கும் வேலையை என் தலையில் கட்டி விட்டார்களே என்று நொந்து நூலாகி வந்திருக்கிறேன்... நீ வேறு... கூட கொஞ்சம் குழப்பாதே."

"கல்யாண மண்டபத்தை விசாரிக்கும் வேலையைத் தானே உன் தலையில் கட்டியிருக்கிறார்கள்? கல்யாணப் பெண்ணையே உன் தலையில் கட்டவில்லையே."

"அது வேறு ஆசையா உனக்கு? யாருக்கு வேண்டும் அந்தச் சுமை? இந்தத் தாலியைக் கட்டிவிட்டு... சாயந்திரம் ஐந்து மணிக்கு வீட்டிற்கு ஆஜராகும் வேலையெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது. கொடுமைடா சாமி. எப்படித்தான் இந்தக் கல்யாணத்தை - பல்லைக் காட்டிக் கொண்டு பண்ணிக் கொள்கிறாங்களோ."

"அது கல்யாணம் பண்ணிக் கொள்கிறவனின் பாடு. உனக்கும் எனக்கும் என்ன வந்தது? வந்தோமா... நாலு ஃபிகரை சைட் அடித்தோமா... பந்தியில் உட்கார்ந்து சாப்பாட்டை ஒருகை பார்த்துவிட்டு... வீட்டில் கொடுத்த மொய் பணத்தை எழுதினோமா... நடையைக் கட்டினோமா... என்று இல்லாமல் வீணாய் ஏன் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிற?"

"அப்படிங்கறே?"

"அப்படித்தாண்டா மச்சி..."

"இந்த வள்ளுவர் இருக்கிறாரே... அவர் சரியான ஆள்..."

"எந்த வள்ளுவரைச் சொல்கிற? நம் தெருமுனையில் நாயர் டீக்கடைப் பக்கத்தில் பெட்டிக் கடை வைத்திருக்கிறாரே அந்த வள்ளுவரையா சொல்கிற?"

"உன் புத்தி இருக்கிறதே... அது இப்படித்தான் புல்மேயப் போகும். ஏண்டா... சின்ன வயதில் படித்த திருக்குறளெல்லாம் உனக்கு நினைவில் இருக்கிறதா... இல்லையா?"

"ஏன் நினைவில் இல்லை... 'யான் நோக்க நிலம் நோக்கும்'..."

"ஆரம்பிச்சுட்டியா... இதை மட்டும் நொட்டை விட்டுக் கொண்டு சொல்லு. இதை எழுதிய திருவள்ளுவரை இப்போது நினைவுக்கு வருகிறதா?"

"ஓ... நீ வள்ளுவரைச் சொல்கிறாயா?"

"ஆமாம்டா... ஆமாம்..."

"நான் இந்த வள்ளுவரைத்தான் சொல்கிறாயோன்னு நினைத்து விட்டேன்... ஹி... ஹி..."

"சிரிக்காதே... சகிக்கவில்லை. வாசலில் வரவேற்கிறதுக்கு டீன் ஏஜ் பெண்களாய் நிற்கிறாங்க... அடக்கி வாசி."

"அலையாதேடா..."

"யார்? நான் அலைகிறேனா... நேரம்டா."

"ஆமாம். வள்ளுவரை ஏன் இப்போது இழுத்தாய்,..."

"அவர். 'இடுக்கண் வருங்கால் நகுக...'ன்னு சொல்லி வந்திருக்கிறார்."

"அப்படின்னா?"

"இதுக்கு உனக்கு அர்த்தம் தெரியாதே... 'யான் நோக்க நிலம் நோக்கும்' என்பதற்கு மட்டும் அர்த்தத்தை பிட்டுப்பிட்டு வைப்பாயே... துன்பம் வரும்போது அதைச் சிரிப்பாக மாற்றிக் கொள்ளணுமாம்."

"இதையெல்லாமா வள்ளுவர் எழுதி வைத்திருக்கிறார்..."

"ஆமாண்டா ராசா... அவர் அறத்துப்பால்... பொருட்பால்... இன்பத்துப்பால்ன்னு மூன்று வகையாய் பிரித்து எழுதினார். உன் மண்டையில்தான் இன்பத்துப்பாலைத் தவிர வேறு எதுவும் ஏற மாட்டேன் என்கிறதே."

"விடு மச்சி... இந்த வயதில் இதெல்லாம் சகஜம்."

"அப்போ... இன்னும் கொஞ்சம் வயசானால் நீ மாறி விடுவாயாக்கும்?"

"அதை எதற்கு வெட்டியாக செய்யச் சொல்கிறாய்?"

"அதுதானே... கிழக்கே உதிக்கும் சூரியன் கூட மேற்கே உதிக்கலாம். ஆனால் நீ மட்டும் மாறவே மாட்டாய்?"

"அதனால் உனக்கென்ன நஷ்டக்கமுதை வந்து விட்டது?"

"எனக்கென்ன வந்தது?" "அதோ... அங்கே வரவேற்பில்தான் இன்னும் சூப்பர் ஃபிகர் வந்து நிற்குது."

"அதற்கு என்னை என்னடா செய்யச் சொல்கிறாய்?"

"இங்கே நின்று பேசுவதை... அந்தப் பெண்களுக்கு முன்னால நின்று பேசலாமே..."

"ஏண்டா... அதுகளுக்கெல்லாம் அவ்வளவு வெயிட் கொடுக்கணுமாடா?"

"உனக்குப் பெண்களைப் பிடிக்காவிட்டால் ஒதுங்கிநில்... என் வழியை மறைக்காதே..."

"நான் என்ன உன் முகத்தை மறைத்தா நின்று கொண்டு இருக்கிறேன்?"

"இது உன் சொந்தக்காரங்க வீட்டுக் கல்யாணம்..."

"அதையேண்டா நினைவு படுத்துகிற? ஒரே நாளில் மூன்று கல்யாணம்... பாட்டியும் தாத்தாவும் ஒரு கல்யாணத்தை அட்டெண்ட் பண்ணப் போய்விட்டாங்க. அப்பாவும், அம்மாவும் இன்னொரு கல்யாணத்தில் ஆஜராக வேண்டுமாம். அதனால் என்னைப் பிடித்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறாங்க."

"உன் தங்கை இருப்பாளே..."

"அவளுடைய ஃப்ரெண்டுக்கு கல்யாணமாம். ஏன்தான் ஊரெல்லாம் இப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அலைகிறான்களோ."

யதுநந்தன் விளக்கெண்ணெயைக் குடித்தவன்போல் முகத்தை வைத்துக் கொண்டு பேசிய தினுசில் முரளிக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"உன்னைப் போலவே ஊரில் இருக்கிறவங்க எல்லாம் நினைத்தால் விளங்கிவிடும். பேசாமல் வாடா... நான் உன்கூடத் துணைக்கு வந்தவன்... உன்னை முன்னால் விட்டுத்தான் நான் பின்னால் வந்தாக வேண்டும்."

"ஓ... அதுக்குத்தான் இந்த ஓட்டு ஓட்டினாயா? வந்து சேரு..."

அவர்கள் இருவரும் திருமண மண்டபத்தின் வாசல் படிகளில் ஏறி... வரவேற்புப் பகுதியை அணுகினார்கள்.

நீண்ட மேஜையின் மேல்... பூ வேலைப்பாடு செய்த விரிப்பு போடப்பட்டிருக்க... அதன்மேல் சந்தனப் பேழா... பன்னீர் செம்பு... பூக்குவியல் கொண்ட தட்டு... எல்லாம் வைக்கப்பட்டிருந்தது. மேஜைக்கு அந்தப் பக்கமாய் இருபது வயது மதிக்கத்தக்க இளம்பெண்கள் - நால்வர் நின்றிருந்தனர்.

முரளி அவர்களைப் பார்த்ததும் பிரேக் பிடித்ததுபோல் நின்று விட்டான். முடியைக் கோதி வண்ணம் ஏதோ முக்கியமான விஷயத்தை யதுநந்தனிடம் பேசுவது போன்ற முகபாவனையை வரவழைத்துக் கொண்டு அந்தப் பெண்களை ஜாடையாய் பார்த்தவாறு யதுநந்தனிடம் பேசினான்.

"யது..."

"சொல்லு..."

"அந்த அகர்வால் இருக்கிறானே..."

"எந்த அகர்வால்?"

"அவன்தாண்டா. அந்த மும்பைக் கம்பெனி அகர்வால்."

"அவனுக்கென்னடா வந்தது?"

முரளிக்கும் எரிச்சல் குமிழிட்டது.

'இவன் ஒருத்தன்... எல்லாத்தையும் இவனிடம் விளக்கிக்கிட்டே இருக்கணும் ஃபிகருக்கு முன்னால் சீன் காட்டலாம்னு நினைத்தால்... வழிக்கு வர மாட்டேன் என்கிறானே?'

யதுநந்தனுக்கு கேட்டது போல் அடிக்குரலில் முணுமுணுத்தான் முரளி.

"டேய்.. நான் பேசுவதற்கு மண்டையையாவது ஆட்டி வைத்துத் தொலைடா..."

"ஏண்டா... நேரம் கெட்ட நேரத்தில் தேவையில்லாத பேச்சு பேசுவ. அதுக்கு நான் மண்டையை ஆட்டணுமா? இதுக்கெல்லாம் நீ வேறு ஆளைப் பாரு..."

"ஏண்... வாயை வளர்க்காதேடா. ஃபிகருக முன்னாடி கொஞ்சம் பிலிம் காட்ட விடு."

"ஓ... நீ அப்படி வருகிறாயா?"

"அப்பா... இப்போதாவது புரிந்து கொண்டாயே..."

முரளி நிம்மதியாய் மூச்சுவிட... யதுநந்தன் திரும்பி வரவேற்பில் நிற்கும் பெண்களைப் பார்த்தான்.

"ஏண்டா... இந்த மூஞ்சிகளுக்காகவா நீ பிலிம் காட்டுற? இந்த மூஞ்சியில் எந்த மூஞ்சியும் நல்லாவே... இல்லையேடா..." என்று சத்தமாக முரளியிடம் சொல்லிவேறு வைத்தான்.

"காரியத்தைக் கெடுத்தாயேடா..." முரளி தலையில் கை வைத்துக் கொண்டான்.

அந்தப் பெண்களின் முகத்தில் கோபம் தெரிந்தது.

"ஹலோ... உங்கள் மூஞ்சியை நீங்கள் கண்ணாடியில் பார்த்திருக்கிறீங்களா?" அவர்களில் ஒருத்தி முறைத்தாள்.

“தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.” பேச வாய்ப்புக் கிடைத்த உற்சாகத்தில் முரளி அவளிடம் வழிந்தான்.

‘இந்த வழிசலுக்கெல்லாம் நான் மசிய மாட்டேன் என்கிற ரீதியாய் அவள் பதிலுக்கு முரளியை முறைத்தாள்.

“பார்த்த பின்னாலுமா இந்தத் தெனாவெட்டு... உங்கள் இரண்டு பேரின் குரங்கு மூஞ்சிகளுக்கு எங்கள் மூஞ்சி ஒன்றும் குறைந்து போய்விடவில்லை...” அந்தப் பெண் கோபத்துடன் பொரிய...

“சுபா... நீ கொஞ்சம் சும்மா இருடி...” என்று அருகிருந்த பெண் அவளை அதட்டினாள்.

“ஏண்டி சும்மாயிருக்க வேண்டும்? நம் மூஞ்சிகளைப் பற்றி விமர்சனம் பண்ணுகிற மூஞ்சிகளாடி இது?”

“வேண்டாம் சுபா... இது கல்யாண வீடு.”

“நீ இதில் தலையிடாதே ராதா... நாமா இவர்களுடன் வம்புக்குப் போனோம்? நாம பாட்டுக்கு தேமேன்னு ரிசப்ஷனில் நின்று கொண்டிருக்கிறோம். இதுக இரண்டும் வந்திச்சுக. வந்ததுக கல்யாண மண்டபத்திற்குள் போகாம இங்கே நின்னு சீன் போட்டுச்சுக. கடைசியில் நம்ம மூஞ்சியை விமர்சனம் பண்ணுதுக. இதைக் கேட்டுக் கொண்டு என்னைச் சும்மா இருக்கச் சொல்கிறாயா?”

அந்த ‘ராதா’ எனப்பட்டவளிடம் ‘சுபா’ எனப்பட்டவள் கொந்தளித்துக் கொண்டிருப்பதைக் கேட்ட பின்பாவது யதுநந்தன் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அவனோ...

‘இதுபோல... நான் எத்தனைய பார்த்திருப்பேன்.’ என்று கூறிய அலட்சியப் பார்வையை சுபாவைப் பார்த்து வைத்ததுமில்லாமல்...

''சும்மா இல்லாமல் என்ன செய்யப் போகிறீங்க மே...ட...ம் பரத நாட்டியம் ஆடப் போகிறீங்களா...'' என்று வேறு கூடச் சேர்த்துக் கேட்டு வைத்தான்.

''என்ன தைரியம்?'' இப்போது கொதித்துப் போவது ராதாவின் முறையாகிப் போனது.

''தைரியம் வந்திருப்பது யாருக்கு? எங்களுக்கா... இல்லை உங்களுக்கா? ஆமாம்... தெரியாமல்தான் கேட்கிறேன். உங்க ஃப்ரெண்ட் இவ்வளவு நேரமாய்... அதுக... இதுகன்னு பேசினாங்களே. யாரைப் பேசினாங்க? உங்களையும் அதுபோல நாங்கள் பேச எவ்வளவு நேரமாகும்?'

யதுநந்தன் சட்டையை மடித்து விட்டுக் கொள்ளாத குறையாய் ராதாவிடம் மோதிக் கொண்டிருப்பதைக் கண்டு முரளி பதறிப் போனான்.

''ஏண்டா... நாம எதற்கு வந்திருக்கிறோம்... நீ என்ன காரியம் செய்துகிட்டு இருக்க... உள்ளே வா போகலாம்.''

ஏறக்குறைய கையைப் பிடித்து இழுக்காத குறையாய் முரளி... யதுநந்தனை இழுத்துக் கொண்டு போக... ராதா ஒரு பாட்டில் தண்ணீரை எடுத்து ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

''யாருடி இவன்? நம்ம ராதாவையே... தலையாலே தண்ணிகுடிக்க வைத்து விட்டானே...'' என்று சுபாவிடம் இன்னொருத்தி கேட்டுக்கொண்டிருக்க... ராதாவின் மனமும் அதே கேள்வியைத்தான் அப்போது கேட்டுக்கொண்டிருந்தது.

## 2

அலைகடலாய் ராதாவின் மனம் கொந்தளித்தது. சித்தி பெண்ணின் திருமணத்திற்கு வந்தவளை... வரவேற்பில் நிற்க வைத்த சொந்த பந்தங்களை மனதார - மனதிற்குள் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஹப்பா... பெரிய சுனாமியே வந்து ஓய்ந்து போனது போல இருக்கு..." பெருமூச்சு விட்டாள் சுபா.

"அவனுக பாட்டுக்கு வந்தானுக... நம்ம மூஞ்சியும் ஒரு மூஞ்சியான்னு கேட்டு... நம்மகிட்டயே ஒரு சண்டையும் போட்டானுக. இப்ப இடத்தைக் காலி பண்ணிட்டு போயிட்டானுக... என்னடி... இது. பெரிய வேடிக்கையாய் இருக்கு..." என்றாள் லாவண்யா.

"அதானே... இவனுக கல்யாணத்திற்கு வந்தானுகளா இல்லை நம்மைப் பெண் பார்க்க வந்தானுகளா... என்னவோ மாப்பிள்ளை ரேஞ்சுக்கு இப்படி ஒரு பில்ட் அப்பைக் கொடுத்துவிட்டு போயிருக்கானுகளே..." ரேவதி அங்கலாய்த்தாள்.

தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த ராதா கோபத்துடன் வெடித்தாள்.

"கொஞ்சம் அடங்குங்கடி... அவங்களை முகத்திற்கு நேராகவே... அவனுக... இவனுக...ன்னு சொன்னால் அவங்க சண்டைக்கு வரமாட்டாங்களா?"

"வேண்டாம் ராதா. வீணாய் அவங்களுக்கு சப்போர்ட் பண்ணாதே... ஏண்டி... நாம் ரிசப்ஷனில் நிற்கிறோமா... இல்லை ஃபேஷன் பரேடில் நிற்கிறோமா? என்னவோ ஆணழகன் ரேஞ்சுற்கு அலட்டிக் கொண்டு வந்து நம்மைப் பார்வையிட்டு விட்டு கமெண்ட் பண்ணலாமா?"

"தப்புதான் சுபா... அவங்க செய்தது தப்புதான். அதைக் கேட்பதற்கு முன்னால்... நாமும் அதே தப்பைச் செய்து விட்டால் அவங்களை எப்படிடீ நாம் கேள்வி கேட்க முடியும்? இரண்டு பக்கமும் ஈக்குவல் ஆகிவிடாதா?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது. எனக்குத் தெரிந்த தெல்லாம் வம்புக்குப் போகக் கூடாது வந்த வம்பை விடக்கூடாது... அவ்வளவுதான்..."

"அதற்கு? இப்ப... என்னதான் செய்யப் போகிற?"

"பொறுத்திருந்து பார்..."

சுபா சூளுரைத்து விட்டு... லாவண்யாவும்... ரேவதியும் பின்தொடர உள்ளே சென்றுவிட....

'எக்கேடோ... கெட்டுத் தொலையுங்கள்...' என்று எரிச்சலுடன் நினைத்தபடி ராதா அங்கேயே நின்றுவிட்டாள்.

திருமண மேடைக்கு முன்னால் இருந்த நாற்காலிகளில் அமர்ந்திருந்தவர்கள் மணமேடையை கவனிப்பதை விட்டுவிட்டு... அவரவர் மனப் போக்கின்படி வருகிறவர்கள்... போகிறவர்களைக் கவனித்துக் கொண்டிருக்க... முரளி... யதுநந்தனை வறுத்தெடுத்துக் கொண்டிருந்தான்.

"நீயெல்லாம் ஒரு நண்பனாடா?"

"என்னவோ... ஜூலியஸ் சீஸர்... புரூட்டஸைப் பார்த்துக் கேட்பது போல் கேட்கிறாயே... இப்ப என்னடா ஆச்சு?"

"இன்னும் என்ன ஆகணும்? உன்னை நம்பி உன் பின்னால் வந்தேன் பார்... என்னைச் சொல்லணும்!"

"என்னவோ... காதலன்கிட்ட... காதலி சொல்கிற மாதிரி... என்கிட்ட வந்து பினாத்துகிறாயே... என்ன விஷயம்?"

"கல்யாண வீட்டிற்கு ஏண்டா... உன்கூட வந்தேன்."

"வேறு எதற்கு? கல்யாணச் சாப்பாடு... சாப்பிடத்தான்."

"என்னை சாப்பாட்டு ராமன்னு முடிவே பண்ணிட்டியா?"

"அதுதானேடா உண்மை..."

"உன் உண்மையைத் தூக்கி உடைப்பில் போடு நீயும்... உன் உண்மை விளம்பும் லட்சணமும்... கல்யாண வீட்டுக்கு வந்தால்... கலர் கலராய் நாலு ஃபிகரைப் பார்க்கலாம்னு நானே... ஏங்கிப் போய் உன்கூட வந்து தொலைந்தேன்."

"உன்னைப் பார்த்தால்... ஏங்கிப் போய் வந்தது போல் இல்லையே..."

"வேறு எப்படி இருந்தது?"

"நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்ததுபோல் இருந்தது."

"யது... வேண்டாம்... வராதே... சொல்லிட்டேன்."

"அப்போ... நீயும் வாயை மூடிக்கொண்டு உட்காரு."

"நீ பண்ணி வைத்திருக்கும் வேலைக்கு நிம்மதியாய் நான் உட்கார முடியும்?"

"இப்ப என்னடா ஆகிப் போச்சு? உலகம் தலைகீழா தொங்குதா?"

"ம்ஹூம்... அங்கே பாரு..."

முரளி கைகாட்டிய திசையில் சுபா, எரிதணல் விழிகளோடு போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வை... முரளியை சுட்டெரித்தது.

"அவளுகளுக்கு என்னடா?"

"எப்படிப் பார்க்கிறாளுக பாரு...'

"அவளுகளைப் பார்ப்பதே பெரிசு. இதில் அவளுக பார்வையை வேறு நான் பார்த்து வைக்கணுமா? அதை நீயே பாரு."

"எங்கே பார்க்கிறது... அப்படியே எரிக்கிறது போல பார்க்கிறாளுகடா... உன்னோடு வந்ததற்கு... அழகான பெண்களை எதிரிகளாக்கிக் கொண்டதுதான் எனக்குக் கிடைத்த பலன்."

"புலம்பாமல் உட்காரு. அவளுக கூட நட்பு பாராட்டிட்டாலும்... அப்படியே விளங்கிவிடும்."

யதுநந்தன் அலட்சியமாய் சுபா கோஷ்டி இருந்த திசைப் பக்கம் திரும்பிப் பார்க்க... அப்போதுதான் அவர்களோடு வந்து சேர்ந்து நின்ற ராதா... யதேச்சையாய அவன் பக்கம் பார்த்தாள். இருவரின் பார்வையும்... எரிமலையாய் சந்தித்துக் கொள்ள - லாவண்யா.. 'களுகு...'கென்று வாய் பொத்தி சிரித்தாள்.

"எதுக்குடி சிரிக்கிற?" சுபா புரியாமல் கேட்டாள்.

"ம்ம்.. அண்ணனும் முறைத்தான்... அவளும் முறைத்தாள். கண்ணோடு கண் கலக்க... கனல் பற்றி எரிந்தது."

"ஏய்ய்... இவள் கம்ப ராமாயணத்தை உல்டா பண்ணுகிறாடி... ஏண்டி... ராமாயணத்தைக் கூட நீ விட்டு வைக்க மாட்டாயா?"

"அதில்லை சுபா... நம்ம ராதா... அந்த வில்லனை முறைத்தாள் பாரு. அதைப் பார்த்தவுடன் தானாய்... கவிதை பொங்கி வருதுப்பா..."

"நீ சொல்றதுக்கு பெயர் கவிதையா?"

"பின்னே... இல்லையா?"

"நீ சொல்வதற்கு பெயரெல்லாம் கவிதைன்னா... கவிதைக்கு என்ன பெயர் வைப்பது?"

"அது எதையாவது வைத்துக் கொள்ளலாம். இப்ப வில்லனுக்கு ஒரு செக் வைக்கணுமே... என்ன பண்ணலாம்?"

அவர்கள் கலந்து ஆலோசிக்க ஆரம்பித்தபோது... ராதாவை அவளுடைய அம்மா மந்தாகினி அழைக்கவும் அவள் எழுந்து சென்று விட்டாள்.

'கடனே' என்று மனமேடையைப் பார்த்த வண்ணம் யதுநந்தன் அமர்ந்திருந்தபோது... மணமகளின் தந்தை வந்து அவனை வரவேற்றார்.

'வாப்பா... யதுநந்தா... அம்மாவும்... அப்பாவும் வரவில்லையா?''

''அவங்க வேறு ஒரு மேரேஜை அட்டெண்ட் பண்ணப் போயிருக்கிறாங்க அங்கிள்...''

''அப்படியா... தாத்தா, பாட்டி சௌக்கியமா?''

''சௌக்கியம்...''

அவர் வேறு ஒரு உறவினரை வரவேற்க நகர்ந்துவிட... யதுநந்தன் எரிச்சலுடன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். பின் நாற்காலியை விட்டு எழுந்தான்.

''எங்கேடா போகிற?''

''பாத்ரூமிற்கு...''

''மெதுவாகவே வா... நான் நிம்மதியாய் கடலைபோட முடியுமான்னு பார்க்கிறேன்.''

''உனக்கு உன் பிரச்னை...''

யதுநந்தன்... மாடிப் படிகளின் அருகேயிருந்த பாத்ரூமை நாடிப் போனான். அவன் வெளியே வந்தபோது... மாடிப்படியின் மேலிருந்து... அவன் முகத்தில் கரித்தூள் வந்து கனமாய் விழுந்தது.

'என்ன இது...' அவன் இயல்பாய் முகம் துடைக்க... முகம் பூராவும் கரி அப்பிக் கொண்டது.

அதை உணராமல் அவன் முரளியின் அருகே போய் அமர... அருகிலிருந்தவர்கள் அவனை வினோதமாகப் பார்த்தனர். எப்படியாவது சுபாவின் அருள் பார்வையை பெற்றுவிட வேண்டி... இடைவிடாமல் பார்வைக் கணைகளை வீசிக் கொண்டிருந்த முரளி... தற்செயலாய் திரும்பி யதுநந்தனைப் பார்த்தவன்...

“பே... பே... பே... பேய்...” என்று அலறினான்.

“டேய் முரளி... ஏண்டா இப்படி அலறுகிற?”

“இது யதுவின் குரல் மாதிரியே இருக்கே...”

“ஏண்டா... என்குரல்... என்குரல் போல இருக்காமல் உன் குரலைப் போலவா இருக்கும்?”

“யது... என் நண்பனே... நீயாடா இது?”

முரளி உருக்கத்துடன் வினவ... யதுநந்தன் திகைத்துப் போனான்.

‘என்றைக்கும் இல்லாத திருநாளாய்... இவன் ஏன் இப்படி பரிதாபப்படுகிறான்?’

“ஏண்டா... இப்படிக் கேட்டுத் தொலைக்கிற?”

“உன் முகத்தைப் போய் கண்ணாடியில் பார்...”

முரளி அடக்க முடியாமல் சிரிக்க... அருகிலிருந்தவர்கள் இன்னும் வினோதமாய் பார்க்க... யதுநந்தன் அவசரமாய் எழுந்து பாத்ரூமை நோக்கிப் போனான்.

பாத்ரூமில் இருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தவன் அதிர்ந்து போனான். முகமெல்லாம் கரித்தூள் அப்பி பார்க்கவே சகிக்க முடியாமல் இருந்தது அவன் முகம். அவசரமாய் அங்கிருந்த சோப்பை எடுத்து முகம் கழுவிவிட்டு வெளியே அவன் வரவும்... மாடியிலிருந்து... எதற்காகவோ சிரித்துக் கொண்டே இறங்கிய ராதா... அவனுக்கு எதிரே வரவும் சரியாக இருந்தது.

‘எப்படிச் சிரிக்கிறாள் பார்... என் முகத்தில் கரியைப் பூசிவிட்ட சந்தோஷத்தில் சிரித்து மகிழ்கிறாளா...’ மனதில் வன்மத்துடன் யதுநந்தன் அவளைப் பார்க்க... தன் சிரிப்பு மாறாதவளாய்... அவளது பார்வையை உணராமல் ராதா அவளைக் கடந்து போனாள்.

“எங்கேடா போயிட்ட... தாலி கட்டி முடிச்சாச்சு. வா சாப்பிடப் போகலாம்.” முரளி அழைத்தான்.

பல்லைக் கடித்துக் கொண்டு இருந்த யதுநந்தன் பதில் சொல்லாமல் அவனுடன் போனான். அவர்களுக்கு எதிரே இருந்த வரிசையில்... ராதாவும், சுபாவும் வந்து சாப்பிட அமர்ந்தனர்.

குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த யதுநந்தனின் கவனத்தைக் கவரும் வகையில் சத்தமாக சிரித்தாள் சுபா. அவளது எதிர்பார்ப்பின்படி... யதுநந்தன் அவர்களைப் பார்த்தான்.

“ராதா... நம்மை மட்டம் தட்டிவைக்கலை. நாம் நினைத்தது போலவே மட்டம் தட்டி விட்டோம்டி...”

யதுநந்தனின் முகம் சுருங்க... அதைக் கவனிக்காமல் ராதா... சுபா ஏதோ சொல்கிறாள் என்று சிரித்து வைத்ததுடன் மட்டுமில்லாமல்... தலையையும் ஆட்டி வைத்தாள்.

“அப்புறம்... சும்மாவா... பெண்களை மகாசக்தின்னு சொல்கிறாங்க. ஒரு பெண் நினைத்தால்... எதையும் சாதிப்பாள்” என்று வேறு சொல்லியும் வைத்துத் தொலைந்தாள்.

## 3

நுணலும் தன் வாயால் கெடுமென்றால்... அந்த நுணல் தவறு செய்தது... தன் வாயால் கெட்டது.

இங்கே சுபா நடத்திய சதி ஆலோசனையையும்... அதன் பின்னால் அவர்கள் மூவருமாக சேர்ந்து... யதுநந்தனின் முகத்தில் கரியைப் பூசிவிட்ட நிகழ்ச்சியையும் தெரியாத அப்பாவி ராதா விழா நாளின் குதூகலத்தில்... தான் என்ன பேசுகிறோம்... அதனால் என்ன பின்விளைவு நேரப் போகிறது என்று அறியாமல் பேசி விட்டாள்.

தென்னை மரத்தில் தேள் கொட்டினால்... பனை மரத்தில் நெறி கட்டிய கதையாய்... சுபா செய்த செயலுக்கு... ராதா தன்னையறியாமல் தலைகொடுத்து... தான் பிணையாகி விட்டாள்.

'யதுநந்தன்' ராதாவை என்ன செய்தால் தகும்... என்ற யோசனையோடு பார்க்க ஆரம்பித்தான். அதை உணராத ராதா... தன் போக்கில் பெண்ணின் பெருமையை அள்ளி வீசிக் கொண்டிருந்தாள்.

"அவனுக்குப் பெண் அடிமையென்பது அந்தக் காலம். இப்போது ஆணால் பெண்ணை அவமதிக்க முடியாது... என்ன சுபா.. நான் சொல்வது சரிதானே..."

ராதா கேட்ட கேள்விக்கு - யதுநந்தனின் கேலிப் பார்வை பார்த்தபடி - சுபா பதில் கொடுத்தாள்.

"அதாவது... நம்மிடம் யாராவது தேவையில்லாமல் வாய் விட்டால்... வாங்கிக் கட்டிக்கொண்டுதான் ஆகணும்னு சொல்கிற..."

"அதுவேதான்... பெண்கள்னா கிள்ளுக்கீரையா? ஆண்களாலே செய்ய முடிவதை பெண்களால் செய்ய முடியாதா?"

"அதுதானே... நீ நினைத்தால் எதையும் செய்யலாம். கண்ணாடி பார்க்காத மூஞ்சிகளைக்கூடக் கண்ணாடியைப் பார்க்க வைக்கலாம்."

சுபாவிற்கு தான் தப்பிக்க வேண்டும் என்ற எண்ணமோ... தனக்குப் பதில் ராதாவை மாட்டிவிட வேண்டும் என்ற திட்டமோ துளிக்கூட இல்லை. அவளுக்கு யதுநந்தனை சீண்ட வேண்டும். அவன் முகத்தில் கரி பூசிவிட்ட பெருமையைப் பறைசாற்ற வேண்டும் அவ்வளவுதான்.

ஆனால்... திட்டம் போட்டு செயலாற்றிய தன்னை விட்டுவிட்டு ராதாவை யதுநந்தன் முறைப்பதை அறியாமல் கோபத்தைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தாள். அவன் பல்லில் சாப்பாட்டை அரைப்பதற்குப் பதில் ராதாவின் மேலிருந்த கோபத்தையும் சேர்த்து அரைத்துக் கொண்டிருந்தான்.

கை கழுவும் இடத்தில்... ராதா சுபாவிடம் தாழ்ந்த குரலில் எதையோ சொல்லிச் சிரிக்க... பதிலுக்கு யதுநந்தனைத் திரும்பிப் பார்த்த சுபா சிரித்து வைத்தாள்.

அவனுடைய முகத்தில் கரியைப் பூசியதைச் சொல்லித்தான் ராதா சிரித்துக் கொண்டிருக்கிறாள் என்று யதுநந்தன் நினைத்து விட்டான்.

"ம்ஹூம்... உன்கூட ஆசையாய் கல்யாண வீட்டிற்கு வந்து ஒருநாள் வீணானதுதான் மிச்சம்." முரளி அலுத்துக்கொண்டான்.

"அதுதான் கொட்டிக் கொண்டாயே... அப்புறமும் என்ன?" யதுநந்தன் எரிந்து விழுந்தான்.

"உனக்கு உன் கோபம்... என் தவிப்பு உனக்கெங்கே தெரியப் போகிறது..." தூரத்தில் சென்று கொண்டிருந்த சுபாவைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டபடி முரளி கூறினான்.

"கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு முரளி. இதோ வந்து விடுகிறேன்."

ராதா மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருப்பதை ஒரு வேட்டைப் புலியின் பார்வையோடு பார்த்த யதுநந்தன். முரளியை உட்காரச் சொல்லிவிட்டு அவசரமாய் அங்கிருந்து நழுவினான்.

"எங்கேடா அந்தப் பக்கம் போகிற? வாசல் பக்கம்தான் மொய் எழுதிக் கொண்டிருக்கிறாங்க..." முரளி கூப்பிட்டான்.

“பாத்ரூமுக்கு போய்விட்டு வருகிறேண்டா...”

“எத்தனை தடவைதான் பாத்ரூம் போவே?”

“அது என் இஷ்டம். நீ அடங்கி உட்காரு...”

“என்னை அடக்குவதிலேயே குறியாய் இரு.”

முரளி முணுமுணுத்துக் கொண்டே சுடிதார் பெண்கள் யாரும் பார்வை வட்டத்திற்குள் சிக்குகிறார்களா என்று தேட ஆரம்பிக்க... யதுநந்தன் அவசரமாய் மாடிப் படிகளில் தாவி ஏறினான். ராதா ஓர் அறைக்குள் நுழைவதைப் பார்த்ததும் சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு சட்டென்று அவள் நுழைந்த அறைக்குள் அவனும் நுழைந்து விட்டான்.

பெட்டியைத் திறந்து எதையோ எடுத்துக் கொண்டிருந்த ராதாவைத் தவிர அறையில் யாரும் இல்லை. யதுநந்தன்... நிதானமாய் அறைக் கதவைத் தாழிட்டான். சத்தம் கேட்டுத் திரும்பிய ராதா... விழிகளில் பயத்தை வாங்கினாள்.

“என்ன... என்ன... வேண்டும்? ஏன்... கதவைச் சாத்தினீங்க?” நடுங்கிய குரலில் கேட்டாள். அவள் விரல்களுக்கு நடுக்க ஆரம்பித்தன.

“என்ன வேண்டுமா? எனக்கு நீதான் வேண்டும். ஏன் கதவைச் சாத்தினேனா? உன்னுடன் பேச்சுவார்த்தை நடத்த கதவைச் சாத்தினேன் வா... பேச்சுவார்த்தை நடத்தலாம்...” யதுநந்தன் அவனை நெருங்கினான்.

“என்னுடன் பேச்சுவார்த்தை நடத்த என்ன இருக்கிறது? நீங்கள் யாரேன்னு எனக்குத் தெரியாது. நான் யாரென்று உங்களுக்குத் தெரியாது. நமக்குள் பேச எதுவுமில்லையே...”

ராதா பயந்த முகத்துடன் பின்வாங்கினான்.

"நமக்குள் எதுவுமில்லையா? நிறைய இருக்கிறது மேடம். என் முகத்தில் கரியைப் பூசி என் முகத்தைக் கண்ணாடியில் பார்க்க வைத்து... கைக் கொட்டிச் சிறந்த வீராங்கனையாச்சே... நீ பெண்களின் வீரதீரத்தைப் பற்றி கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வாய் கிழியப் பேசியவளாச்சே நீ. பெண் நினைத்தால் இதையும் செய்வாள்... எதையும் செய்வாள்... அப்படி... இப்படின்னு... அள்ளி வீசினியே... இப் ஏன்... கை விரல்கள் எல்லாம் தந்தியடிக்குது?"

"ப்ளீஸ்... நான் என் பெரியம்மா பெண்ணிடம் சும்மா பேசிக் கொண்டிருந்தேன். நீங்கள் அதைத் தப்பா நினைத்து விட்டீங்க போல..."

"ம்ஹூம்... உன்னைச் சரியாகத்தான் நினைத்து வைத்திருக்கிறேன். எவ்வளவு தைரியம் இருந்தால் என் முகத்தில் கரிப்பொடியை வீசுவ?"

"யார் வீசுயது? நானா?"

"தெரியாதது போல நடிக்கிறாயா?"

"நடிக்கிறேனா? நானா? நிஜமாகவே எனக்குத் தெரியாது... நம்புங்க..."

"உன்னை நம்புவதா?"

ராதா பயத்துடன் பின்வாங்கி... சுவரின் மேல் சாய்ந்து நின்றுவிட்டாள். அவளது இருபுறமும் கைநீட்டி... அவனை சிறைபிடித்த யதுநந்தன்... அவளது முகத்தின் அருகே நெருங்கினான்.

"ப்ளீஸ்... வேண்டாம்... போய்விடுங்கள்..." ராதா பயத்துடன் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

"போவதற்கான நான் வரவில்லை..."

"ஒரேயொரு நிமிடம்... நான் சொல்வது உண்மையாக இருக்கக் கூடாதான்னு நினைத்துப் பாருங்க..."

"நான்தான் கண்ணெதிரே பார்த்தேனே..."

"எதைப் பார்த்தீங்க?"

"நீ சிரித்துக் கொண்டே படியிறங்கி வருவதைப் பார்த்தேன்."

"ஏங்க... நான் உங்கள் முகத்தில் கரிப்பொடியை வீசியதைப் பார்க்காமல். சிரித்துக் கொண்டே இறங்கி வருவதைப் பார்த்தேன்னு சொல்கிறீங்களே... இது உங்களுக்கே நல்லா இருக்கா? இதுதான் உங்கள் புத்திசாலித்தனமா?"

"ஏய்..."

யதுநந்தன் கோபம் அதிகமாகி கர்ஜித்தான். அவனது தோள் வளைவின் இரு பக்கமும்... சுவரோடு கையூன்றி அவன் நிற்க... அந்தக் கைகளுக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்த ராதா... அந்த நிலைமையிலும் அவனது விழியோடு விழி பார்த்தாள்.

"இந்த நிலைமையிலும் உன் எகத்தாளம் குறைய வில்லையே..."

"இப்போது என் நிலைமைக்கு என்ன குறைச்சல்?"

"தோற்றுப் போய் விட்டாலும்... உன் திமிர் உன்னை விட்டுப் போகவில்லையே..."

"இன்னும் நான் உங்களிடம் என்னைத் தோற்க வில்லை."

"பேச்சை நிறுத்திவிட்டு செயலில் இறங்கு என்கிறாயா?"

"இல்லை... கடைசி வரை போராடாமல் தோல்வியை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறேன்."

"போராட்டத்தை ஆரம்பித்து விடலாமா?"

"அதற்கு முன் இந்தப் போராட்டம் எதற்காகன்னு எனக்குக் காரணத்தைச் சொல்லிவிடுங்கள்."

"நீ தேவையில்லாமல் என்னுடம் விளையாடி விட்டாய். பதிலுக்கு... நான் உன்னிடம் விளையாடிப் பார்க்க வேணாமா?"

"நான் உங்களிடம் எந்த விளையாட்டையும் வைத்துக் கொள்ளவில்லை. அதுதான் உண்மை. ஆனால்... அதை நீங்கள் நம்பப் போவதில்லை. அதனால் ஒன்றே ஒன்றை மட்டும் நான் கேட்கிறேன். நான் விளையாடி விட்டதாக நீங்கள் சொல்லும் செயலிலே நீங்கள் எதை இழந்தீங்க? இப்போது நீங்க விளையாடிப் பார்க்க விரும்பும் விளையாட்டில் நான் இழக்கப் போவதை உங்களால் திருப்பிக் கொடுக்க நினைத்தாலும் திருப்பிக் கொடுக்க முடியுமா?"

யதுநந்தன் திகைத்தான். அவளது வேகம் கொஞ்சம் குறைந்தது.

"உங்களிடம் கோபம் இருக்கிறது. அதனால் குணமும் கட்டாயம் இருக்கும்."

"பேச்சை திசை திருப்புகிறாயா?"

"நிச்சமாய் இல்லை. நீங்கள்தானே பேச்சுவார்த்தை நடத்தலாம்னு சொன்னீங்க? பேச்சென்று வந்தால்... எல்லாவற்றையும் பேசிப் பார்த்துவிட வேண்டாமா?"

"பேசு... கண்மணி பேசு... அமுதிலும் இனிய உன் வாய்மொழிகளைக் கேட்கத்தான் ஓடோடி வந்திருக்கிறேன். என் செவியில் இன்பத் தேன்வந்து பாய்ந்தது போல் இருக்கிறது... நீ பேசு."

யதுநந்தனின் கேலியை ராதா கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவள் தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தாள்.

"பெண்களின் பெருமையை பேசினால் என்ன? நான் மட்டும்தானா பெண்? உங்கள் அம்மாவும் பெண்தானே... தங்கையும் பெண்தானே... அவர்கள் ஒரு தவறு செய்தால் பொறுத்துக் கொள்ள மாட்டீங்களா?"

தங்கையின் நினைவு வந்ததும்... யதுநந்தனின் கை தானாக விலகியது. ராதா நிம்மதி மூச்சு விட்டாள்.

## 4

இன்னும் நான் முழுமையாக விடுபட்டு விடவில்லை என்பது ராதாவிற்கு புரிந்துதான் இருந்தது.

அறைக்கதவு மூடியது மூடியதாகவே இருந்தது. யதுநந்தன் கைகளை மட்டும்தான் விலக்கிக் கொண்டான். நகர்ந்து நிற்கவில்லை. அவன் கண்களில் தெரிந்த கோபமும் மறையவில்லை.

"பதிலுக்குப் பதில்னு நீங்கள் நினைத்தால் அதே கரிப் பொடியை அள்ளி என் முகத்தில் பூசிவிடுங்கள். நான் அதே முகத்துடன் இந்தக் கல்யாண மண்டபத்தில் ஒரு சுற்றி சுற்றிவிட்டு வருகிறேன். நீங்க சிரித்து மகிழ்ந்துக்கங்க. உங்கள் மனம் சரியாகிவிடும். அதை விட்டுவிட்டு... இது என்ன நடவடிக்கை சொல்லுங்க?"

"செய்வதையும் செய்துவிட்டு... என்னமாய் எனக்கு பிளான் போட்டுக் கொடுக்கிற? ம்ம்... கெட்டிக்காரித்தான்."

அவர்கள் வழக்காடிக் கொண்டு இருந்தபோது... அறைக்கதவு... படபடவென்று தட்டப்பட்டது. ராதா முகம் வியர்த்தாள்.

"பாத்தீங்களா... நீங்கள் யோசிக்காமல் உள்ளே வந்து கதவைத் தாழ்போட்டு விட்டீங்க. இப்ப என்ன நடந்து

கொண்டிருக்கிறது. பாருங்க? நான் கதவை எப்படித் திறப்பேன்? நீங்களும் நானும் பூட்டிய கதவிற்குப் பின்னால் இருப்பதை மத்தவங்க பார்த்து விட்டால் நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க? இப்படிச் செய்து விட்டீங்களே...''

''புலம்பாதே... நான் ஏதாவது வழி கண்டு பிடிக்கிறேன்...''

யோசனையுடன் அறையைச் சுற்றுமுற்றும் பார்த்த மதுநந்தனின் முகம் பளிச்சிட்டது.

''நான் பாத்ரூமிற்குள் போய்க் கதவைத் தாழ் போட்டுக்கறேன்.''

''கதவைத் தாழ் போடுவதில்தான் நீங்கள் கில்லாடியாச்சே...''

''திரும்பவும் வாய் விட்டாயானால் நான் போட்ட தாழ்ப்பளை நானே திறந்து... வெளியே கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறவங்களுக்கு 'பேட்டி' கொடுத்து விடுவேன். செய்யவா? எப்படி வசதி?''

''நான் பேசியது தப்புதான் சாமி. கன்னத்தில் போட்டுக் கொள்கிறேன். நீங்கள் பாத்ரூமுக்குள் போய் பத்திரமாய் இருங்க.''

''அது... அந்த பயம் மனதில் இருக்கட்டும்.''

விரலை நீட்டி எச்சரித்தவன்... பாத்ரூமிற்குள் சென்று கதவை அடைக்கப் போனான். ஏதோ நினைத்தவனாய்...

''ஒரு விஷயம்...'' என்றான்.

''என்ன?''

''உள்ளே யார் இருக்கிறாங்கன்னு வந்திருப்பவங்க கேட்டால் என்ன சொல்வாய்?''

''உங்கள் பெயரையா சொல்ல முடியும்?''

''ஏன்... சொல்லித்தான் பாரேன்...''

''கடவுளே... என் சொந்த பந்தங்களில் யாராவது ஒருவரின் பெயரைச் சொல்லி சமாளித்துக் கொள்கிறேன்.''

''வெரிகுட்... பை...''

''பாத்ரூமிற்குள் ஒளிந்து கொள்வதற்கு எதற்கு இவன் 'பை...' போடுகிறான் என்று மானசீகமாய் தலையில் அடித்துக் கொண்ட ராதா... அறைக் கதவைத் திறந்து விட்டாள்.

''இவ்வளவு நேரம் கதவைத் திறக்காமல் என்னடி பண்ணிக் கொண்டிருந்த...?'' என்று கேட்டபடி... சுபா உள்ளே வந்தாள்.

''தூங்கிட்டேண்டி...''

''தூக்கமா? கல்யாண மண்டபத்திலா...? நல்ல வேலை செய்கிற போ... கீழே நானும்... லாவண்யாமும் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது.''

''ஏன்... என்ன விஷயம்?''

''உனக்கு விஷயமே தெரியாதில்லையா? காலையில் நம்முடன் தகராறுக்கு வந்தானே அந்தக் குரங்கு மூஞ்சி வில்லன்...''

பாத்ரூமிற்குள் இருக்கும் யதுநந்தனின் முகம் இதைக் கேட்டதும் எப்படி மாறுமோ... என்ற கவலையுடன் ராதா ஒருமுறை பாத்ரூமை திருப்பிப் பார்த்துக் கொண்டாள்.

''ஏண்டி... அவருக்கென்ன?''

''அவராமே. அவர்... குட்டிச் சுவர். நீ ஒருத்திதாண்டி காலையிலிருந்து அவனை... ''அவர்' போடுகிற...'' சுபா சலித்துக் கொண்டாள்.

பாத்ரூமில் இருந்த யதுநந்தனுக்கு சுபா பேசியது தெளிவாகக் காதில் விழ... அவன் நெற்றியில் சிந்தனை ரேகை படிந்தது.

"விடுடி... இப்ப அவரைப் பற்றி ஏன் பேசுகிற?"

"நம்ம மூஞ்சியெல்லாம் ஒரு மூஞ்சியான்னு கேட்டானில்ல. அவன் மூஞ்சியில் நாங்க கரியைப் பூசிட்டோம்."

"என்னடி செய்து தொலைத்தீங்க?"

"பாராட்டுவதை விட்டு விட்டு திட்டு... மாடிப்படிக்கு அடியிலிருக்கிற பாத்ரூமிற்கு... நம் வில்லன் சார் வந்தார். நாங்க மாடிப்படி மேலேயிருந்து கரித்தூளை அவன் முகத்தில் கொட்டி விட்டோம். அவன் முகமெல்லாம் கரி அப்பி... ஹா... ஹா... ஹா... பார்க்கவே சகிக்கவில்லை. ஹா... ஹா... ஹா..."

ராதா அவசரமாய் எழுந்து பாத்ரூமின் கதவை வெளியே தாழிட்டாள்.

"போதும் சிரித்தது..."

ராதா நிம்மதியுடன் பாத்ரூமை பார்த்துக் கொண்டாள். இதைச் செய்தது நானில்லை என்பதை அவன் புரிந்து கொண்டிருப்பான் என்று நினைக்கும் போதே...

"அவன் நினைவைப் பற்றி நீயேன் இவ்வளவு கவலைப்படுகிறாய்?" என்று கேட்டது... அவளுடைய மனது.

'அதுதானே... அவன் என்னைப் பற்றி என்ன நினைத்தால் எனக்கென்ன? சுபா சொல்லியபடி அவன் வில்லன் போலத்தானே என்னிடம் நடந்து கொண்டான்?" என்று நினைக்கும் போதே... அவளுடைய பேச்சைக் கேட்டு... விலகி நின்ற அவனுடைய செயல் அவளுக்கு நினைவிற்கு வந்தது.

சுபா... கொஞ்சநேரம் தான் கரி பூசிய சம்பவத்தை சொல்லிச் சிரித்துவிட்டு... எழுந்து சென்று விட்டாள். ராதா அவசரமாய் பாத்ரூம் கதவைத் திறந்து விட்டாள். யதுநந்தன் அவளைப் பார்த்தபடி வெளியே வந்தான்.

''நான்தான் உள்ளே தாழ் போட்டிருந்தேன்... அப்புறம் எதுக்கு... நீயும் வெளியில் தாழ் போட்ட? என்னை உள்ளே வைத்து பூட்டிவிட திட்டம் போட்டிருந்தாயா?''

''சத்தியமாய் இல்லை... எதற்கும் இருக்கட்டும்னுதான் நான்... வெளியே தாழ்போட்டேன்.''

''உண்மையான காரணம் என்னன்னு நான் சொல்லவா?''

''சொல்லுங்க...''

''அந்த சுபா... நடந்ததைச் சொல்லி விட்டார். நான் கோபத்தில் வெளியே வந்து அவளை எதுவும் செய்து விடுவேனோங்கிற பயம் உனக்கு.''

ராதா மௌனம் சாதித்தாள். யதுநந்தன் குற்ற உணர்வுடன் அவளுடைய முகத்தைப் பார்த்தான்.

''ஐ ஆம் ஸாரி...''

''இதற்கு 'பரவாயில்லை'ன்னு நான் பதில் சொல்வேன்னு நினைத்தீங்களா? நான் அப்போதே இதைத்தான் கேட்டேன். கோபத்தில் நீங்க முறை தவறியிருந்தால்... இப்போது உண்மை தெரிந்ததும்... அதை சீர் பண்ணிவிட உங்களால் முடியுமா?''

உணர்ச்சி வயப்பட்டதால் ராதாவின் முகம் செக்கச் செவேலென்று சிவந்திருந்தது. அந்தச் சிவந்த முகத்தைப் பார்த்தபடி யதுநந்தன் நிதானமான குரலில் கூறினான்...

''நிச்சயம் சீர் பண்ணிவிட என்னால் முடியும்!''

''எப்படி?''

''உன் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டிவிட்டால்... நடந்த தவறு... சரியாகி விடாதா?''

ராதா பேச்சிழந்தாள். 'இது என்ன இவன் இப்படிச் சொல்கிறானே...' என்று இருந்தது அவளுக்கு.

“தட்ஸ் குட்... ஒரு பொண்ணை விருப்பமில்லாமல் ஒருவன் பலவந்தப்படுத்திவிட்டு... அவள் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா? எந்த ஊர் நியாயம் இது?”

“நம்ம ஊர் நியாயம்தான். அதுசரி... என் மேல் உனக்கு விருப்பமில்லையா... என்ன?”

அவன் சிரித்துக் கொண்டே அறையைவிட்டு வெளியேறிவிட்டான். ஒரு வினாடி உரைந்து நின்ற ராதா... அவசரமாய் மாடிப் படிகளின் அருகே ஓடிச் சென்று பார்த்தாள். படிகளில் இறங்கிக் கொண்டிருந்தவன் சட்டென்று திரும்பி அவளைப் பார்த்து கை அசைத்து விட்டுச் சென்றுவிட்டான்.

‘என் மனதைத் திருடிச் சென்றுவிட்ட கள்வன்...”

“யார் அவன்?”

அவளது இதயம் கேள்வி கேட்டது. அவள் அவசரமாய் கீழே இறங்கிச் சென்றாள். யதுநந்தன் யாரோடோ பேசிக் கொண்டிருந்தவன். இவளது வருகையை எதிர்பார்த்தவன் போல் ரகசியப் புன்னகை பூத்தான். ராதாவிற்கு வெட்கமாகி விட்டது.

‘கண்டு கொண்டேனே...’

அவள் வேலையிருப்பது போன்ற பாவனையில்... மணப்பெண்ணின் அருகே சென்று... அவளது காதோரம் குனிந்து. எதையோ கேட்டுவிட்டு... உள்ளே சென்றாள்.

அவள் போகும் திசையெல்லாம் யதுநந்தனின் பார்வையும் போனது. அவன் முரளியின் அருகே சென்று உட்கார்ந்து கொண்டான்.

‘இவ்வளவு நேரமாய் எங்கேடா போயிருந்த?’

“ம்ம்... புதையல் ஒன்றைக் கண்டுவிட்டேனா... அதைத் தோண்டி எடுக்கப் போயிருந்தேன்.”

“நீ செய்தாலும் செய்வாய்... வா... போகலாம்.”

“எங்கே?”

“இது என்னடா கேள்வி... கல்யாணத்திற்கு வந்தோம். கல்யாணம் முடிந்து விட்டது. இனி அவரவர் வீட்டிற்குப் போக வேண்டியதுதானே...”

“பொறுடா... போகலாம் எனக்கு இந்தக் கல்யாண வீட்டின் கலகலப்பு பிடித்திருக்கிறது.”

“மது... நீயாடா பேசுகிறாய்...? கல்யாணம் பண்ணிக் கொள்கிறவர்களைக் கண்டாலே உனக்கு கொலைவெறி வருமேடா...”

“இப்போ கள்வெறி வருகிறது.”

அவனைக் கடந்து போன ராதாவைப் பார்த்தவாறு அவன்கூற... அவள் மின்னலென ஒரு பார்வையை அவன் மீது பாய்ச்சிவிட்டுச் சென்றாள்... முரளி... ‘ஆ...’வென்று வாய் பிளந்தான்.

“மச்சான்... இது எப்போதிருந்துடா நடக்குது.”

“கொஞ்ச நேரமாகத்தான்...”

“உனக்குக் கூடக் காதல் வருமாடா?”

“இது காதலான்னு தெரியலை.”

“முதலில் அப்படித்தான் இருக்கும்.”

“நீ இதில் கரை கண்டவனாச்சே...”

‘என்னத்தை கரை கண்டேன். இதுவரை ஐந்து பெண்களுடன் காதல் வந்தது. எல்லோரும் கடைசியில் கல்யாண இன்விடேசனைக் கையில் கொடுத்துவிட்டு... ‘டாட்டா’ காண்பித்து விட்டுப் போய் விட்டாங்க.”

''உன்னைக் காதலித்தால்... அவங்களுக்கு கல்யாணம் சீக்கிரம் நடந்து விடும்ன்னு யாராவது ஜோஸியம் சொல்லியிருப்பாங்க போல... என்ன ராசியான ஆள்டா நீ.''

''நானே நொந்து நூடுல்ஸாகியிருக்கேன். நீ வேறு கரண்டியைப் போட்டுக் கிளறாதே...''

முரளி கடுப்புடன் கூறிக் கொண்டிருந்ததை கவனிக்காதவனாய் - யதுநந்தன்... அருகில் அமர்ந்திருந்த சுபாவை அழைத்தான்.

## 5

''எக்ஸ்யூஸ் மீ...''

யதுநந்தன் யாரை அழைக்கிறான் என்று திரும்பிப் பார்த்த முரளிக்கு தூக்கி வாரிப்போட்டது.

"இப்போ எதுக்குடா... அந்தப் பெண்ணைக் கூப்பிடுகிற?"

''சும்மாதான்...''

''நீ சும்மா இருக்க மாட்டாயே. அந்தப் பெண்ணுடன் சண்டைக்கு போவாயே... வேண்டாம்டா... இப்போதுதான் அந்தப் பொண்ணு... லேசு பாசாய் என்னைத் திரும்பிப் பார்க்குது."

முரளி புலம்பிக் கொண்டிருக்கையில் சுபா... விறைப்பான பார்வையுடன் எழுந்து அவனருகே வந்து நின்றாள். அவளுக்கு இருபுறமும் பாதுகாப்பு அதிகாரிகள் போல... லாவண்யாவும், ரேவதியும் நின்று கொள்ள... அவள் விழியில்..

'நீ என்னை என்ன செய்து விடுவாய்? என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

''உட்காருங்க...'' யதுநந்தன் பக்கத்து நாற்காலியைக் காட்டினான்.

“உங்கள் பக்கத்திலெல்லாம் உட்கார முடியாது. என்ன விஷயம்ங்கிறதைச் சொல்லுங்க...” சுபா கறாராய் வினவினாள்.

“நின்றால் கால் வலிக்காதா?” முரளி அக்கறை காட்டினான்.

“என் கால்... வலித்தால் வலித்து விட்டுப்போகட்டும். அது என் இஷ்டம். வேறு யாரும் அக்கறை பட வேண்டாம்” சுபா எரிச்சலுடன் முறைத்தாள்.

“என்னடா இவங்க எப்பப் பார்த்தாலும் முறைத்துக் கிட்டே இருக்காங்க?” முரளி கவலையுடன் யதுநந்தனிடம் கேட்டுக் கொண்டிருந்தபோது...

“என்ன மாப்பிள்ளை... சௌக்கியமா?” என்றபடி ஒருவர் அங்கே வந்தார்.

“என்னது... மாப்பிள்ளையா?” சுபா... தூக்கிவாரிப் போட்டவளாய் வந்தவரைப் பார்த்தாள்.

“என்னம்மா இப்படிக் கேட்டுவிட்ட.... இது யாருன்னு நினைத்தே?” என்று அவர் சுபாவைக் கேட்டார்.

அவள் திருதிருவென்று விழித்தாள். முரளி... யதுநந்தனின் காதோரமாய் சரிந்து...

“யாருடா இவரு?” என்று வினவினாள்.

“யாருக்குத் தெரியும்?”

“உன்னைப் போய் மாப்பிள்ளை என்கிறாரே...”

“ஓ... உனக்கு அதுதான் பிரச்னையா? வேண்டுமானால் உன்னை மாப்பிள்ளைன்னு சொல்லச் சொல்லவா?”

“அதற்கு முன்னால் இந்த சுபாவிற்கு இவர் என்ன உறவு முறைன்னு தெரிந்து கொள்ளலாம். அப்பா... சித்தப்பான்னால்... மாப்பிள்ளைன்னு கூப்பிடட்டும். போனால் போகிறதுன்னு

ஏற்றுக் கொள்ளலாம். மாமாவாய் இருந்து தொலைத்தால் இவளுக்கு நான் அண்ணன் ஆகிவிடும் அபாயம் இருக்கிறதே..."

"அது வேறயா... அப்போ...பொறுத்திருந்துதான் பார்க்கணும்..."

சுபாவின் அருகேயிருந்த லாவண்யாவோ சன்னக் குரலில், "ஏண்டி சுபா... இவரு யாருன்னு நினைத்தேன்னு உன் அப்பா கேட்கிறாரே... வில்லனாக நினைத்தேன்னு உண்மையைப் போட்டு உடைத்து விடலாமா?" என்று கேட்டாள்.

"சும்மாயிருடி... நீ ஒரு பக்கம் கடுப்பேத்தாதே... போயும் போயும் இந்த வில்லனைப் போய் மாப்பிள்ளைன்னு கூப்பிட்டுக் கொண்டிருக்கிறாரேன்னு நானே வெந்து கொண்டிருக்கிறேன்."

சுபாவின் தந்தை யதுநந்தன் பாசமாய் பார்த்தபடி... "என் ஒன்றுவிட்ட தங்கையின்... நாத்தனாரின் சித்தப்பா மகளின் அக்காவைத்தான்... இந்தத் தம்பியோட சின்னத் தாத்தாவின் பெரியப்பா மகனின் வீட்டில் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கிறாங்கம்மா..." என்று கூறினார்.

சுபா திகைத்துப் போய் விழித்தபடி யதுநந்தனைப் பார்க்க... அவன் முரளியைப் பார்த்தான்.

"என்னடா இது... அப்போ... இவர் எந்தச் சொந்தத்தை வைத்து உன்னை மாப்பிள்ளைங்கிறாரு?"

"அதுதாண்டா எனக்கும் குழப்பமா இருக்கு."

"அதை விடு. இந்தப் பெண்ணுக்கு இவர் என்னவாகணும்? அதை நேரடியாய்க் கேட்டுவிடு."

"நேரடியாய் நான் கேட்டால் மட்டும் இவர் உடனே நேரடியாய் பதில் சொல்லிவிடுவாராக்கும் என்னால் முடியாது... நீயே கேள்..."

“நானா? போடா போ... ஏற்கனவே இவர் சொன்ன உறவு முறையை வரைபடம் வரைந்து கண்டுபிடிக்க வேண்டு மேன்னு நானே கவலையில் இருக்கிறேன். நான் போய் இவரைக் கேட்பதா?”

அவர்களின் பேச்சு சுபாவின் அப்பாவின் காதுகளில் விழாமல் போனாலும் சுபாவின் காதுகளில் தெளிவாக விழுந்து விட்டது. அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

“அப்பா... இவர் யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். உறவு முறையைச் சொல்லி தலையைச் சுற்ற வைக்காமல் விட்டு விடுங்கள்.”

“அது இல்லையம்மா... உனக்கும் நம் உறவு முறைகளைப் பற்றித் தெரிய வேண்டாமா?”

“தெரிந்த வரைக்கும் போதும்...”

“என்னத்தைத் தெரிஞ்சு என்ன பிரயோஜனம்? இந்தக் காலத்துப் பிள்ளைக சொந்த பந்தத்தைப் பற்றி எங்கே யோசிக்கிறீங்க...”

“அவர்தான் என் மாமாவா?” என்று சுபாவிடம் விசாரித்தான் யதுவந்தன்.

“கொழுப்பா...” என்று கொதித்தபடி....

“ம்ம்... அவர் என் அப்பா மட்டும்தான்...” என்று விரைத்துக் கொண்டாள் சுபா...

“அப்பாடி.... அவர் அப்பாதானாம்டா...” முரளி மகிழ்ந்து போனான்.

“அதில் பாருங்க சுபா... நீங்களும்... நானும் ஒன்றுக்குள் ஒன்று ஆகி விட்டோம்.”

“அப்படின்னு யார் சொன்னது?”

“உங்கள் அப்பாதானே இப்போது சொல்லிவிட்டுப் போனார். சந்தேகமிருந்தால் அவரைக் கூப்பிடுகிறேன்... கேட்கறீங்களா... மாமா... மாமா...”

யதுநந்தன். போய்க் கொண்டிருந்த சுபாவின் அப்பாவைக் கூப்பிட யத்தனிக்க, அவசரமாய் சுபா - அவனுக்கு அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

“ஏன் சார் இப்படி அராத்து பண்ணுகிறீங்க? உங்களுக்கு என்னதான் வேணும்?”

“ம்ம்... உங்களிடம் என் முகத்தில் வீசியது போக மீதியிருக்கும் கரிப்பொடி வேணும். கொடுக்கறீங்களா?”

“அது உங்களுக்குத் தெரிந்து விட்டதா?”

“தெரியாமல் எப்படிப் போகும்? புலியை முறத்தில் அடித்த தமிழச்சியைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். கரிப்பொடியால் அடித்த தமிழச்சியை இப்போதுதான் நேரில் பார்க்கிறேன்.”

யதுநந்தன் சொல்லிக் கொண்டே போக... சுபா சுற்றுமுற்றும் பார்வையில் தேடினாள்.

“என்ன தேடுகிறீங்க?”

“புலியைத் தேடுகிறேன். இங்கே எங்கேயும் புலியைக் காணோமே...”

“ஓஹோ... அம்மணி என் காலை வாருகிறீங்களாக்கும். ஏன்... என்னைப் பார்த்தால் புலிபோல தெரியவில்லையா?”

“புலியா... நீங்களா... ஹ...”

“போதும்... போதும்... ரொம்பத்தான் சிலிர்த்துக்காதீங்க. நான் பழைய யதுநந்தனாக இருந்திருந்தால் உங்களைச் சந்திக்கும் விதமே வேறு. இப்போது எனக்கு வேறு ஒரு வேலை

உங்களால் ஆக வேண்டியிருக்கிறது. அதனால்தான் உங்களை... உட்கார வைத்து உரையாடிக் கொண்டிருக்கிறேன்.''

''என்ன சார்... எங்களை மிரட்டிப் பார்க்கறீங்களா?''

''அது என்ன 'எங்களை...'னு பன்மையில் சொல்லிக் கொள்கிறீங்க.... இங்கே நீங்க மட்டும்தான் உட்கார்ந்தீருக்கிறீங்க. உங்க ஃப்ரெண்ட்ஸ் யாரும் இப்போது உங்ககூட இல்லை. நீங்க செய்ததை நான் கண்டு பிடித்துவிட்டேன்னு நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவங்க கம்பி நீட்டி விட்டாங்க. என்ன மாதிரியான ஃப்ரெண்ட்ஸ் உங்களுக்கு? ச்ச... ச்... ச்... பாவம் நீங்க...''

''இப்ப எதுக்க இத்தனை 'ச்' போடுகிறீங்க...''

''ஒரு பரிதாபம்தான். வேறு என்ன? 'உடுக்கை இழந்தவன் கைபோல... ஆங்கே... இடுக்கண் களைவதாம் நட்பு'ன்னு... தாடிக்கார புலவர் ஒருவர் சொல்லியிருக்கிறாரே... அதை உங்கள் ஃப்ரெண்ட்ஸுக்கு அப்புறமாய் எடுத்துச் சொல்லுங்க.''

''இங்கே பாருங்க சார்...''

''உங்களையெல்லாம் என்னால் பார்க்க முடியாது. இதோ என் பக்கத்தில் இருக்கிறானே... இவன்தான் காலையிலிருந்து உங்களைப் பார்த்து ஜொள்ளு விட்டுக் கொண்டிருக்கிறான். இவனை வேண்டுமானால் உங்களைப் பார்க்கச் சொல்கிறேன்.''

''இந்தக் கலாட்டாவினால்தான் உங்களுக்கும் எனக்கும் தகராறே வருகிறது. நீங்கள் என்ன பெரிய ஹேண்ட்சம் மேனா? உங்களைத் திரும்பிக்கூட நான் பார்க்க மாட்டேன் தெரியுமா?''

''அவசியமேயில்லை. என்னை வேறு ஒரு ஆள் திரும்பிப் பார்த்தால் போதும். அதற்காகத்தான் உங்களோடு உட்கார்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.''

"இது வேறா? உங்களைப்போய் எவள் சார் திரும்பிப் பார்ப்பாள்?"

"உங்கள் குழுவில் ஒருத்தித்தான்."

"எங்கள் நால்வர் குழுவிலா? யாரைச் சொல்றீங்க?"

"உங்கள் நான்கு பேரில்... முதுகில் குத்தாத வீரப் பெண்மணி... மங்கையர் குல திலகம்... மாதருள் மாணிக்கம்னு ஒரு அழகுப் பெண் இருக்காளே... அவளைச் சொன்னேன்."

'முதுகில் குத்தாதவளா...' சுபாவிற்கு புரிந்து விட்டது. அவர்கள் மூவரும் மாடிப் படியில் மறைந்திருந்து யதுநந்தனின் மேல் கரிப்பொடியை வீசியதைச் சொல்கிறான்.

'அந்த மங்கையர் குல திலகம்... ராதாவா?'' அவள் ஆச்சரியத்துடன் யதுநந்தனைப் பார்த்தாள்.

"ராதாவா... உங்களைப் பார்க்கிறாள்? இருக்காதே..."

"அதை நீங்க சொல்ல வேண்டாம். அவள் சொல்லட்டும்."

"ஊஹூம்... நான் இதை நம்ப மாட்டேன்."

"உங்களுக்கும்... எனக்கும்... எதற்கு வீண் விவாதம்? உங்கள் ராதாவையே இங்கே கூப்பிடுங்களேன்."

"கூப்பிட்டு... அவளிடம் போய் இதைக் கேட்பதா? சேச்சே..."

"ஏம்பா... இதையெல்லாம் வாயால் கேட்டுத்தான் தெரிந்து கொள்வீங்களா? உங்களுக்கு மண்டையில் மசாலா இருந்தால் தானாய் கண்டுபிடித்து விட மாட்டீங்களா?"

சுபாவிற்கு ரோசம் வந்துவிட்டது. அவளைப் போய் இவன் இப்படிக் கேட்க... அவள் சும்மாயிருப்பதா? உண்மையை அறிந்து கொள்ள களம் இறங்கினாள் அவள். அந்தப் பக்கமாய் ஏதோ வேலையிருப்பது போல் சென்று ராதாவை கை தட்டி அழைத்தாள்.

"ராதா... ராதா..."

திரும்பிப் பார்த்த ராதாவின் முகத்தில் வியப்புக் குறி...

'என்னடா இது... ஒபாமாவும்... லேடி பின்லேடனும் ஒன்றாக உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்றாங்க. இது எப்படி சாத்தியம்?"

"என்னடி?"

"இங்கே வா..."

ராதா வந்தாள். முகம் சிவக்க யதுநந்தனை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டாள். தேவையின்றி... புடவை முந்தானையை விரலால் சுற்றியபடி... காலால் தரையில் கோலம் போட்டாள். உதடுகளை லேசாக மடித்துக் கடித்தபடி ஒரு மார்க்கமாய் சுபாவை பார்த்து வைத்தாள்.

'இவள் ஏன்... இப்படி விழிக்கிறா?" சுபா யோசனையுடன் யதுநந்தனைப் பார்க்க... அவள் சங்கோஜமே இல்லாமல் ராதாவை விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 6

*'ஒரு பக்கம் பார்க்கிறா...*
*ஒரு கண்ணைச் சாய்க்கிறா...*
*அவ... உதட்டைக் கடிச்சுக்கிட்டு...*
*மெதுவா சிரிக்கிறா... சிரிக்கிறா...*
*காலாலே... நிலத்திலே...*
*கோலம் போட்டுப் பார்க்கிறா..'*

போன வாரத்தில் - சின்னத் திரையில் போட்ட 'தேன் கிண்ணம்' நிகழ்ச்சியில் பார்த்த பழைய பாடல் சுபாவிற்கு நினைவிற்கு வந்தது.

'ராதா...' அதட்டினாள் அவள்...

"ம்ம்... என்னடி?" உலுக்கிப் போட்டவளாய் தன்னிலைக்கு வந்தாள் அவள்.

"இப்படி உட்கார்..."

ராதா தயக்கத்துடன் அவளருகே அமர்ந்தாள். அவளுடைய அடிப்பார்வை... அடிக்கடி... ஆவலுடன் யதுநந்தனின் பக்கம் பாய்வதையும், அவனது பார்வையை உணர்ந்து அவள் முகம் சிவக்க... அவசரமாய் பார்வையை தாழ்த்திக் கொள்வதையும் கண்ட சுபாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

'போயும்... போயும்... இந்த வில்லனின் மூஞ்சியைத் தானா இவளுக்குப் பிடித்துப் போக வேண்டும்...' என்ற கடுப்புடன் யதுநந்தனை முறைத்தாள்.

"முரளி... இவங்க ஏன் கண்ணகியைப் போல் என்னைப் பார்க்கிறாங்கன்னு கேட்டு வை!"

சுபாவிற்கு இன்னும் கோபம் அதிகரித்தது.

"அதைக் கேட்க அவர் யார்?"

"ஏன்டா... இவ்வளவுதானா நீ... இன்னும் உன் பெயர் ஊரை இவங்ககிட்டே சொல்லவில்லையா?"

"இதோ... இந்த நொடியில் சொல்லி விடுகிறேன்டா.." என்று நன்றியுடன் நண்பனைப் பார்த்த முரளி.

"ஹாய்... ஐ'யாம் முரளி... பி.ஈ.சாஃப்ட்வேர் என்ஜினீயர். சோனா கம்ப்யூட்டர் சொலுஷனில் வொர்க் பண்ணுகிறேன். நீங்க என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீங்க?" என்று முடியை ஸ்டையலாய் கோதியபடி சுபாவிடம் கேட்டான்.

'பரவாயில்லையே... வெட்டியாய் சுற்றாத ரகம் போல இருக்கே...' என்று மனதில் வியந்தபடி...

"வேறு என்ன பண்ணிக் கொண்டிருக்கிறேன்? நீங்கள் போடும் அறுவையைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்..." என்று வெளியே முறைப்பாய் - மூக்கை உடைப்பது போல் பதில் கொடுத்தாள் அவள்.

"ஹா... ஹா... குட் ஜோக்."

"இது... ஜோக்? ம்ஹூம்... ராதா நான் போகிறேண்டி..."

சுபா... ராதாவிடம் சொல்லியபடி முரளியை நோக்கி ஒரு பார்வைக் கணையை வீசிவிட்டு நகர... அவன் அவசரமாய் எழுந்து அவளைப் பின்தொடர்ந்தான்.

யதுநந்தன் இப்போது... ராதாவின் அருகேயிருந்த நாற்காலிக்கு மாறி உட்கார... அவள் சங்கடத்துடன் எழுந்து கொள்ள முயன்றாள்.

"ஸ்ஸ்... இப்போது எங்கே போகப் பார்க்கிறாய்... உன்னை இங்கேவரவழைக்க... உன் ஃப்ரெண்டின்மூஞ்சியைப் பார்த்து நான் பேச வேண்டியதாய்ப் போய்விட்டது. பேசாமல் அடங்கி உட்கார்..." என்று அடிக்குரலில் சினந்தான் யதுநந்தன்.

அவனது ஆளுமை கலந்த உரிமையான அதட்டலைக் கேட்டு அவள் மனம் பரவசம் கொண்டது. ஆனால் நெருங்கிய உறவினர் தவிர... மற்றவர்கள் வெளியேறியிருந்த திருமண மண்டபத்தில்... அங்கொருவரும்... இங்கொருவருமாய் ஆண்கள் உட்கார்ந்திருக்க... ராதாவின் மனதில் பயம் கவிழ்ந்தது.

"யாராவது பார்த்தால் தப்பாக எடுத்துக் கொள்வார்கள்."

"ஈஸிட்? கொஞ்ச நேரத்திற்கு முன்னால் பூட்டிய ரூமிற்குள் என்னிடம் மாட்டிக் கொண்டாய்... அப்போதுகூட நீ இந்த பயம் பயப்படவில்லை. நிதானமாய் எனக்கு நீதி போதனை பண்ணிக் கொண்டிருந்தாய். இப்போது, இத்தனை

பேர் சுற்றியிருக்கும்... வெளி ஹாலில் என்னுடம் சும்மா உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்க இப்படி பயப்படுகிறாயே. இதை நான் என்னான்னு சொல்வது?''

ராதா சற்று இயல்பாகி அவன் முகம் பார்த்தாள். மாநிறத்தில்... வரிசைப் பற்கள் தெரிய புன்னகைத்தவனிடம் தெரிந்த வசீகரம் அவளை மயங்கச் செய்தது. அவள் மயங்கிப் போனால். தன் மயக்கத்தை அவன் உணர்ந்து விடக்கூடாது என்று கவலை கொண்டாள்.

''சொல்லு...''

''என்ன சொல்ல?''

''என்னிடம் சொல்ல உனக்கு எதுவுமேயில்லையா?''

அவள் சட்டென்று அவனைப் பார்த்தாள். அவனது பார்வையில் இருந்த ஏதோ ஒன்று அவளை அவன் பக்கம் ஈர்த்தது.

'என்ன மாதிரியான பார்வை இது? குறும்பு கொப்பளிக்கும் பார்வை. மனதை ஊடுருவிப் பார்க்கும் எக்ஸ்ரே பார்வை... பார்த்தே என்னை மயக்குகிறானே இந்தக் கண்ணன். என்மேல் உனக்கு விருப்பமில்லையான்னு கேட்டானே... என் விருப்பம் தெரிந்தால் என்ன செய்வானாம்? பிருத்விராஜன்... சம்யுக்தையை குதிரை மேல் வைத்துக் கொண்டு போய் விட்டது போல... என்னையும் கொண்டு போய் விடுவானா?'

'அப்படி அவன் கொண்டுபோய் விடக்கூடாதா'... என்று அடிமனம் ஆசைப்படுவதை வியப்புடன் உணர்ந்தாள் ராதா.

'இருந்திருந்து... இவனைச் சந்தித்து... அரைநாள் கூட ஆகவில்லை. அதற்குள் இப்படி என்னை இவன்மேல் பைத்தியமாக்கி விட்டானே... இவன் மாயக் கண்ணனேதான்... அந்தக் கள்வனேதான்.'

அந்த மாயக் கள்ளன் அவளது தவிப்பை உணர்ந்தது போல் வாய்விட்டுச் சிரித்தான். அவன் சிரிக்கும் போது அவன் கண்களும் கூடச் சேர்ந்து சிரிக்கும் அழகை அவள் ரசித்துக் கொண்டிருந்தாள்.

'இப்படி ஒரு சிரிப்பைச் சிரிக்க இவனால் மட்டும்தான் முடியும்.'

காலையில் அவனைக் கண்டதும் மோதியவள்... இப்போது மனதில் அவன் மேல் ஏற்பட்டுவிட்ட எல்லையற்ற பிரேமையைக் கட்டுப்படுத்த வழி தெரியாமல் தவித்தாள்.

''ராதா?''

''ம்ம்...''

''என் பெயரென்னன்னு உனக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

அவள் விழிகள்... அவன் விழிகளைச் சந்திததன. 'பெயர் கூடத் தெரியாமலா நீ என்னை இந்த அளவுக்கு விரும்புகிறாய்?' என்று அவன் விழிகள் கேட்டன.

''என் பெயர் யதுநந்தன். முரளியைப் போல... நானும் பி.ஈ. முடித்துவிட்டு சோனா கம்ப்யூட்டர் சொலுஷனில் சாஃப்ட்வேர் என்ஜினீயராய் வேலை பார்க்கிறேன்.''

''அப்படியா?''

''என்ன... அப்படியா'ன்னு சாதாரணமாக கேட்கிறாய்?''

''வேறு எப்படிக் கேட்க?''

அவள் புரியாமல் வினவினாள். முரளி அவனைப் பற்றி சொல்லியதைக் கேட்டதும்... சுபாவின் விழிகள் காட்டிய ஆச்சரியத்தையும் மரியாதையையும் அவள் விழிகள் காட்டவில்லை.

'இவள் என்னை... எனக்காகவே விரும்புகிறாள்...'

இந்த எண்ணம் மனதில் எழ... அவன் மனதில் தென்றல் அடித்தது.

"படித்துக் கொண்டிருக்கிறாயா?" மென்மையாய் வினவினான்.

"ம்ம்ம்..."

"என்ன படிக்கிறாய்?"

"எம்.எஸ்ஸி... ஃபர்ஸ்ட் இயர்... பயோ கெமிஸ்ட்ரி..."

"வெல்... அப்பாம்மா என்ன பண்ணுகிறாங்க?"

அவன் வினவிக் கொண்டிருக்கும் போதே... மகள் யாருடனோ அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்ட மந்தாகினி அங்கே வந்தாள்.

"ராதா... யாரோடு பேசிக்கிட்டு இருக்க?" என்று வினவியபடி யதுநந்தனைப் பார்த்தவள் -

"நீங்க... ரோகிணியின் மகன்தானே தம்பி?" என்று விசாரித்தாள்.

"ஆமாம் ஆன்ட்டி..." என்று கூறும்போதே...

'கடவுளே.. இவங்க என்னை என்ன முறை சொல்லிக் கூப்பிடப் போகிறாங்களோ... தெரியவில்லையே...' என்று யதுநந்தனின் மனம் அடித்துக் கொண்டது.

"என்ன தம்பி யாரோ போல் பதில் சொல்றீங்க. ரோகிணி என் ஒன்றுவிட்ட மாமாவின் மகள்."

'பரவாயில்லை... இங்கே... ஒரே ஒரு 'ஒன்றுவிட்ட' தான் வருகிறது. ஆனால் என் அம்மா. இவங்களுக்கு மாமன் மகள்ன்னா... இவங்க மகள் எனக்கு என்ன உறவு முறையாக வேண்டும்?"

இந்த உறவு முறையைக் கண்டுபிடித்த யதுநந்தன் கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தபோது...

"அண்ணன் சௌக்கியமா தம்பி...?" என்று கேட்டு யதுநந்தனின் வயிற்றில் பால்வார்த்தாள் அந்த மகராசி.

விட்டால் மந்தாகினிக்கு கோவில் கட்டி விழாவே எடுத்துவிடும் உத்தேசத்துடன்... நன்றி கலந்த பார்வையைப் பார்த்தபடி - எதற்கும் இருக்கட்டுமென்று...

"அண்ணன்னு... என் அப்பாவைத்தானே சொல்கிறீங்க அத்தை..." என்று கேட்டு... உறவு முறையை உறுதிப்படுத்திக் கொண்டான் யதுநந்தன்.

'அடேங்கப்பா... அதற்குள்... ஆன்ட்டி... அத்தையாகி விட்டாங்களா... இவன் இருக்கிறானே... பலே... கில்லாடி!'

மனதிற்குள் கூறிக் கொண்ட ராதா... மெச்சுதலாய் யதுநந்தனை பார்த்தாள்.

"உங்க அப்பாவை என் அண்ணன்னு சொல்லாமல் வேறு யாரைச் சொல்வேன்? அவர் என் பெரியப்பா மகனின்... சின்னம்மா மகனாச்சே..." என்று மந்தாகினி பாசத்துடன் கூற...

'ம்ஹூம்... இவங்களும் ஆரம்பித்து விட்டாங்களா...' என்று அரண்ட பார்வை பார்த்தான் யதுநந்தன்.

"என்ன தம்பி முழிக்கிறீங்க... இன்னும் விவரமாய் சொல்லணுமா..." என்று மந்தாகினி விச்ராந்தியாய் அங்கே உட்கார்ந்துவிட....

"ஐயோ அத்தை... அதெல்லாம் வேண்டாம்... நீங்கள் சொன்னால் பேதாதா? விளக்கம் வேறு வேண்டுமா?" என்று கையெடுத்து கும்பிடாத குறையாய் அவன் வேண்டிக் கொண்டதும், போனால் போகிறது என்று மந்தாகினி அந்தப் பேச்சை அத்துடன் விட்டு விட்டாள்...

"என்னங்க... இங்கே கொஞ்சம் வாங்க..." என்று வாசல் பக்கமிருந்து வந்த கணவரை அழைத்தாள் மந்தாகினி...

"என்ன மந்தாகினி..." என்றவாறு அருகில் வந்தார் ஆனந்தன்.

"இந்தத் தம்பி யாரு தெரியுமா?" மந்தாகினி ஆரமபிக்க... யதுநந்தன் ராதாவிற்கு மட்டும் கேட்கும்படி சன்னமாய் முணு முணுத்தான்.

"உன்னை யார்... குலம் கோத்திரத்தில் பிறந்து வைக்கச் சொன்னது? ... வேறு மதம்... வேறு இனம்னு இருந்திருந்தால்... இப்படி... அண்ணன்... தங்கை உறவு முறை வந்து விடுமோன்னு அரண்டு போகத் தேவையில்லையே... இதில் வேறு உன் அம்மா... உறவு முறையின் வரிசைச் சங்கிலியைச் சொல்லி மிரட்டிக்கிட்டு இருக்காங்க..."

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில்... நேரம் கிடைத்தால்... அடிக்கடி வீட்டுக்கு வந்து போகச் சொல்லி ஆனந்தன் அழைப்பு விடுக்குமளவிற்கு அவர்களது குடும்ப ஜோதியில் ஐக்கியமாகி விட்டான் யதுநந்தன்.

## 7

நீலக் கடலின்மேல் வெள்ளைச் சிறகுகள் முளைத்தது போல்... அலைகள் புரண்டு வந்தன. கரைமீது காதலுடன் மோதிவிட்டு நாணித் திரும்பி ஓடின...

அலையில் கால் நனைத்தவாறு... யதுநந்தனோடு இணைந்து நடந்து கொண்டிருந்தாள் ராதா. வெள்ளை நிறத்தில் தங்க நிற ஜரிகை வேலைப்பாடுகள் செய்த சுரிதார் அணிந்திருந்தாள்... கரியநிற முடியை... 'கிளிப்'பால் அடக்கி விரிய விட்டிருந்தாள்... முகம் கொள்ளாத சிரிப்புடன்...

யதுநந்தனின் விரல்களோடு தன் விரல்களைப் பிணைத்திருந்தாள்...

முரட்டு ஜீன்ஸும்... கார்கோ சர்ட்டும் அணிந்திருந்த யதுநந்தன்... தன் போக்கில் எதையோ கிண்டலாகக் கூறிவிட்டு வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான். அந்தச் சிரிப்பில் மயங்கி நின்றவளைப் பார்த்து கண் சிமிட்டி.

“என்னடி... அப்படிப் பார்க்கிற...” என்று கேட்டான்...

வழக்கம்போல அவனது அந்த அழைப்பில் கிறங்கிப் போனாள் ராதா...

“நீங்கள் சிரிக்கும் போது எப்படியிருக்கிறது தெரியுமா?”

“எப்படி இருக்கிறது?”

“முல்லைப் பூக்களை வரிசைகட்டி வைத்திருப்பது போல் பளீர்னு இருக்கிறது...”

“ஊஹூம்?”

“எப்படித்தான் இப்படி ஒரு அழகான பல்வரிசை உங்களுக்கு அமைந்ததோ...”

பேசியவாறு ராதா கரையோரமாய் மணல் திட்டின் படகோரம் அமர... அருகே அமர்ந்த யதுநந்தன்... முடி கோதியவாறு அவளைப் பார்த்தான்.

ஏனோ... அவனை மடி சாய்த்து முடி கோதி விடவேண்டும் என்ற தாபம் ராதாவுக்குள் எழுந்தது. அவளது பார்வையிலிருந்து அதைக் கண்டு கொண்டவளாய்...

“என்ன?” என்றான் அவன் காதலுடன்.

“ஒன்றுமில்லை...”

“நீ ஒன்றுமில்லைன்னு சொன்னால்தான், ஓராயிரம் இருக்கிறதுனு அர்த்தம்... சும்மா சொல்லு...”

"வந்து..."

"அதுதான் வந்து விட்டோமே..."

"நந்து..."

"ம்ம்... நந்துதான்... ஊருக்கெல்லாம் யதுநந்தன்... சொந்த பந்தம்... நண்பர்களுக்கு யது... உனக்கு மட்டும் நந்து..."

"என் நந்து..."

"உன் நந்துதான் போதுமா? இப்ப எதுக்கு அந்தப் பார்வை பார்த்தாய்... அதைச் சொல்லு..."

"என் மடியில்..."

அவள் தடுமாறிச் சொல்ல முடியாமல் பாதியில் நிறுத்திய போது... யது நந்தன்... அவள் மடிசாய்த்தான்... மனம் நிறைய ஆசையில்... அவன் கழுத்தை வளைத்தது ராதாவின் கரம். அவளது வளையல்களை... நிரடியவாறு அவன் கதை பேச... அவன் முடி கோதியவாறு ஊம் கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்தாள் ராதா.

மாலையில் வந்தவர்கள்... இருள் சூழ்ந்ததும் எழுந்து நின்றார்கள்... பிரிய வேண்டுமே என்ற ஏக்கத்துடன்... ராதா மௌனமாய்... கடற்கரை மணலில்... கால்கள் புதைய... எதுவும் பேசாமல் நடந்து வந்தாள்...

"என்ன... உம்முன்னு வருகிற?"

"ம்ச்ச்..."

"இதுதான் உன்னிடம் எனக்குப் பிடிக்காத குணம்... தினமும்தான் உன்னுடன் நேரம் செலவழிக்கிறேனே... அதற்கு மேல் என்ன உனக்கு மனக்குறை? கூட இருக்கும்போது சந்தோசமாக பேசிக் கொண்டிருக்கிறாய்... கிளம்பும் நேரம் வந்தால்... முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிறாய்...

ஒருநாளாவது முழுமனதோடு... 'போய் விட்டு வா'...ன்னு நீயாய் சொல்லியிருக்கிறாயா? இல்லை... 'நேரமாகிவிட்டது... கிளம்பலாம்'ன்னு கிளம்பியிருக்கிறாயா? ஒருநாளும் இல்லை. ஏன் இப்படி இருக்கிறாய் ராதா?''

இதற்கு என்ன பதில் சொல்வது? அலைகடலாய் பொங்கும் மனது... அவனது அருகாமையில் மட்டுமே அமைதியடைவதையும்... அவன் பிரிந்து விட்டால் ஏக்கத்துடன் மீண்டும் பொங்கி எழுவதையும் எப்படி அவனுக்குப் புரியவைப்பது?

இத்தனை நாள்களாய் அவனில்லாமல் எப்படி வாழ்ந்தோம் என்று புரியாமல் மனம் திகைப்பதையும்... அவனில்லாமல் வாழவே முடியாது என்ற நிலைமைக்குத்தான் தள்ளப்பட்டிருப்பதையும் எப்படி அவனுக்குப் புரிய வைப்பது?

அவனருகில் இருக்கும்போது ஒரு நாள்கூட ஒரு நொடியில் மறைவதையும்... அவன் அருகில் இல்லாதபோது... ஒரு நொடிகூட ஒரு யுகமாய் தோன்றுவதையும் எப்படி அவனுக்குப் புரிய வைப்பது?

இருபத்தி நான்கு மணிநேரத்தின் ஒவ்வொரு மணித்துளியும் அவன் நினைவால் அவள் கழிக்கும்போது... அந்த இருபத்தி நான்கு மணிநேரத்தின் சில மணித்துளிகளை அவளுக்காக அவன் செலவிட வேண்டும் என்று அவள் ஏங்குவதை எப்படி அவனுக்குப் புரியவைப்பது?

பொங்கி எழுந்த பேரலையாய் காதல் அவளை அடித்துச் செல்வதையும்... அதில் துரும்பாக சிக்கி அவள் துடித்துக் கொண்டிருப்பதையும் எப்படி அவனுக்குப் புரிய வைப்பது?

காணக் கிடைக்காத வைரமொன்று கையில் கிடைத்து விட்டால்... மனித ஜீவன் அதைக் காப்பாற்றி தக்க வைத்துக் கொள்ள நினைப்பது இயற்கைதானே...

ராதாவும் அதைப் போல்தான்... தனக்குக் கிடைத்த யதுநந்தனின் காதலைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டு மென்று தவித்தாள்...

ஒருநாள் அவனைப் பார்க்க முடியாவிட்டாலும்... உடைந்து போவாள். பைத்தியக்காரி போல்... வேறு சிந்தனை எதுவுமின்றி - படிக்காமல்... சாப்பிடாமல்... தூங்காமல்... விடியும் வரை விழித்திருப்பாள்...

மறுநாள் மாலை வரை காத்திருக்க இயலாமல் மனம் தவிக்கும்... போராடும்... மாலையில் அவன், முகமெல்லாம் சிரிப்பாய் அருகில் வரும்போது மனம் பொங்கும்...

தான் அனுபவிக்கும் அந்த உணர்வை யதுநந்தன் அனுபவிக்கவில்லையோ என்ற சஞ்சலம் ராதாவுக்குள் வேர் விட்டது.

"என்ன பேசாமல் நிற்கிறாய்? நீ ஊமையா?"

"என் மனம் பாடும் ராகம் உங்களுக்கு கேட்காதபோது நான் வாய்திறந்து பேசி என்ன பயன்? நான் ஊமைதான்..."

"பேசேண்டி... பேசாமல் ஏன் என்னை... இந்தப் பாடுபடுத்துகிறாய்?"

'உன்னைக் கண்டுகொண்ட நாள் முதலாய்... நான் படும் பாடும்... என் மனம் படும் பாடும்... உனக்குப் புரிகிறதா என்ன?"

"இந்தச் கருமத்திற்குத்தான் காதல் என்ற வார்த்தையை நான் நினைத்தே பார்த்ததில்லை..."

யதுநந்தன் எரிச்சலுடன் கூற... ராதாவின் மனம் புண்ணானது... துக்கம் தொண்டையை அடைக்க... பதில் பேசாமல் அவனது வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டாள். யதுநந்தனின் அப்பாச்சி சீறிப் பாய்ந்தது... அவளது வீடிருக்கும் தெருமுனையில் இறங்கிக் கொண்டவளைப் பார்த்து...

''பை...'' என்றான்.

ராதா... பதில் சொல்லாமல்... இறுகிய முகத்துடன் தலையை அசைத்தாள்... யதுநந்தனுக்குக் கோபம் வந்துவிட்டது...

''ஹலோ... 'பை' சொன்னால்... சிரித்த முகத்துடன் பதிலுக்கு 'பை' சொல்லணும்...'' என்றான்.

''நீ பிரிவைச் சொல்வாய்... நான் சிரித்துக் கொண்டே எப்படி உனக்கு விடை கொடுக்க!'

தாயின் மடியைப் பிரிய முடியாத மழலையாய் அவள் மனம் மறுகினாள்...

''உன்கூட நான் முழுவதும் பேசிக்கொண்டிருந்தாலும் உனக்குத் திருப்தியே வராதா ராதா?''

''பை...''

''இப்படி அழுது வடிந்து கொண்டு 'பை' சொல்லு... ஒரு மனுசனை எண்ணெய்ச் சட்டியில் போட்டு வறுத்தெடுப்பதற்குப் பெயர்தான் காதலா...?''

ராதாவின் இதயத்தில் ஈட்டி பாய்ந்ததை உணராமல் அவன் போய்விட்டான். இருளில்... மெதுவாக நடந்து... வீடு வந்து சேர்ந்தாள் ராதா.

இரவின் மடியில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த போது... அவள் விழிகள் உறங்காமல் தலையணையை நனைத்தன... சத்தமில்லாமல் அழ வேண்டி நேர்வதும் பெரும் துயரம். மற்றவர்கள் பார்க்க அழுது மனதின் சுமையை இறக்கி வைக்க முடியாமல்... மனதிற்குள் அழுதுகொண்டு... வெளியில் சிரித்துக் கொண்டு இருப்பது கொடுமை.

*'சொல்லி அழுதால் தீர்ந்துவிடும் - அதைச்*
*சொல்லத்தானே வார்த்தையில்லை...'*

கண்ணதாசன் எப்பேர்பட்ட கவிஞன் என்று ராதாவிற்கு இப்போது புரிந்தது.

"சும்மா... எப்போப் பார்த்தாலும்... கண்ணதாசன்... கண்ணதாசன்னு... பழைய பாட்டையே போட்டுப் பார்க்கறீங்க..." என்று... மந்தாகினியிடம் மல்லுக்கு நிற்பாள்...

இப்போதோ... பழைய பாடல்களைக் கேட்டுவிட்டால்... அதன் கருத்துக்கள் புகுந்து... மறைந்து... கரைந்து விடுகிறாள்...

*"கட்டவிழ்ந்த கண்ணிரண்டும்*
*உங்களைத் தேடும் - பாதிக்*
*கனவினிலே இமையிரண்டும்*
*கண்களை மூடும்...*
*பட்டு நிலா... வான் வெளியில்...*
*காவியம் பாடும் - கண்ட*
*பள்ளியறைப் பெண் மனது*
*போர்க் களமாகும்..."*

பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த ராதாவின் மனதும் போர்க்களமானது எந்நேரமும் அவன் அருகிலிருக்க வேண்டும் என்று அவன் துடித்தாள்... உடலும்... மனமும்... அவனைத்தேட.... அதை, அவனுக்கு உணர்த்தும் வகை தெரியாமல் தவித்தாள்.

"என் தங்கைக்கு முதலில் கல்யாணம் ஆக வேண்டும் ராது... நீ இப்போதுதானே எம்எஸ்ஸி ஃபர்ஸ்ட் இயர் படிக்கிறாய்... முதலில் உன் படிப்பை முடி... அதற்குப் பின்னால் நம் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்..."

யதுநந்தன் என்னவோ எளிதாகக் கூறிவிட்டான்... ஆனால் காத்திருப்பது ராதாவிற்கு எளிதானதாக இல்லை... அவள் அவன் கரம் பிடிக்க ஆவல் கொண்டாள்... வெறும் ராதாவாக இருக்கும் தன்னை...

'ராதா யதுநந்தன்...' என்று ஊர் அழைக்க வேண்டும் என்று பேராசை கொண்டாள். அவனோடு கலந்து அவனில் ஐக்கியமாகிவிட வேண்டும் என்று கனவு கண்டாள்.

## 8

யதுநந்தன்... அவசரமாய் குளித்து... உடைமாற்றி... இறங்குகையில்... அவனது செல்ஃபோன் அடித்தது... மறுமுனையில் முரளி பேசினான்.

"யது... நீ புரொஜெக்டை கம்ப்ளீட் பண்ணிட்டியா?"

"இல்லைடா..."

"இங்கே டீம் லீடர் கத்துகிறான். உடனே வந்து சேரு..."

செல்ஃபோன் அணைந்துவிட... யதுநந்தன் டைனிங் டேபிளில் அமர்ந்தபடி...

"அம்மா... சீக்கிரம்..." என்று குரல் கொடுத்தான்...

"ஏண்டா பறக்கிற? எல்லாம் ரெடியாய் டேபிளில் வைத்திருக்கிறேனே..." ரோணினி பரிமாற ஆரம்பித்தாள்.

"வேலையிருக்கும்மா..." அவன் பொங்கலை அள்ளி வாயில் திணித்துக் கொண்டிருந்தபோது...

"எனக்கும் தட்டைப் போடு ரோகிணி..." என்றபடி வஜ்ரவேல் வந்து அமர்ந்தார்.

"அவன்தான் பறக்கிறான்னு பார்த்தாள்... நீங்கள் அவனுக்கு மேல பறக்கிறீங்களே... ரோகிணி அலுத்துக் கொண்டாள்...

"ஏன் யது... இப்படி அவசரப்படுகிற?"

"புரொஜெக்ட் வொர்க் பாதியில் நிற்குதுப்பா..."

அரைவயிற்றுடன் எழுந்து கை கழுவிவிட்டு... அவன் வாசலுக்கு வந்து வண்டியை எடுக்கையில்... யாமினி ஓடி வந்தாள்.

"அண்ணா என்னைக் காலேஜில் டிராப் பண்ணிவிடு ப்ளீஸ்..."

"உன் ஸ்கூட்டி என்ன ஆச்சு?"

"அது ரிப்பேர்... சர்வீஸுக்கு விட்டிருக்கிறேன்..."

"அப்பாவுடன் போக வேண்டியதுதானே..."

"அவர் இப்போதைக்கு கிளம்புகிறவர்போல் தெரியலையே... அம்மா கொடுத்த காபியை ஆசையாய் ரசித்துக் குடித்துக் கொண்டிருக்கிறார். அவர் ரசனையைக் கெடுக்க எனக்கு மனமில்லை..."

"சரி... சரி... பின்னால் ஏறு..."

நேரமாகிறதே என்ற பதற்றம் மனம் பூராவும் வியாபித்திருக்க... யதுநந்தன்... புயல் வேகத்தில் வண்டியை ஓட்டினாள்... யாமினி பயத்தில் அலறினாள்...

"அண்ணா... மெதுவாகப் போ..."

"அதெல்லாம் வேலைக்கு ஆகாது... நீ கெட்டியாக கம்பியைப் பிடித்துக் கொள்..."

அவளைப் பொறியியல் கல்லூரி வாசலில் இறக்கி விட்டுவிட்டுப் பறந்தான் யதுநந்தன்...

மூச்சுவிட நேரமில்லாத வேலை... அவர்களின் குரூப் லீடர் கோபத்தில் கொதிகலனாய் இருக்க... அதைத் தாங்கிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம்... இரவு பகலை உணராமல் கண்ணாடித் தடுப்பிற்குள்... செயற்கை வெளிச்சத்தில் கம்ப்யூட்டர் திரையிலிருந்து கண்களை அகற்ற முடியாமல்... அதனுள் ஒன்றிப்போக வேண்டிய சூழல்...

யதுநந்தன் வேலையை முடித்துக்கொண்டு எழுந்தபோது... இரவு மணி இரண்டு, உடலும்... மனமும் ஓய்வுக்கு ஏங்க... அயர்ந்து போனவனாய்... கம்பெனியின் ரெஸ்ட் ரூமிலேயே படுத்து கண்ணயர்ந்து விட்டான் அவன்.

ராதா கடற்கரையில் காத்திருந்தாள். ஒவ்வொரு நொடியும் அவனுடைய வருகையை எதிர்பார்த்து... மனம் பரபரக்க... இருப்புக் கொள்ளாமல் அவன் வரும் திசையைக் கண்கள் பூக்கப் பார்த்திருந்தாள்... அவன் வரவில்லை.

முதல்நாள் இரவிலிருந்து... ஒவ்வொரு நொடியையும் - அவனைச் சந்திக்கப் போகும் இந்தக் கணத்திற்காகவே நகர்த்தி... அவனை எதிர்பார்த்து ஓடி வந்தவளுக்கு அவனைக் காணக் கொடுத்து வைக்கவில்லை.

நேரம் கழிய கழிய... ராதாவின் மனதில் துயரம் கவிழ்ந்தது. தன்னைச் சுற்றிப் படர்ந்த இருள் போர்வை நிரந்தரமாய் தன் வாழ்வில் தங்கிவிடுமோ என்று அவள் பயம் கொண்டாள்..

*'ஏன்... என் மனதில் நீ குடியேறினாய்?*
*ஏன்... என் உயிரில் நீ கலந்தாய்?*
*ஏன்... என் சுவாசமாய் நீ மாறினாய்?*
*"ஏன்... என் வாழ்வில்... எனக்கு*
*அனைத்துமாக நீ ஆகிப்போனாய்?*

ராதா மனதிற்குள் கேட்டுக் கொண்டபடி எழுந்து கொண்டாள். அவனுக்காகக் காத்திருந்தும் அவனைக் காண முடியாமல் போனதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'ஒரு நொடி... ஒரேயொரு நொடி... நீ
என்னைப் பற்றி இன்று நினைத்துப் பார்த்தாயா?'

அவளது நெஞ்சும் குமுறியது... எப்போதும் போல் வீட்டிற்குள் நுழையும்போது... முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டாள்...

*"தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே...*
*அமைதி உன் நெஞ்சினில் நிறையட்டுமே...*
*அந்தத் தூக்கமும்... அமைதியும்... நானானால்... உன்னைத்*
*தொடர்ந்திருப்பேன்... நெஞ்சில்... தவழ்ந்திருப்பேன்..."*

'கண்களை மூடித் தூங்காமல் படுத்திருந்தவளின் காதுகளில் இந்தப் பாடல் புகுந்தது... ராதா வெறுமையாக சிரித்துக் கொண்டாள்... இது யார் பாட வேண்டிய பாடல்? யதுநந்தன் பாடவேண்டிய பாடல்... அவன்தானே அவளுடைய தூக்கத்தையும்... அமைதியையும் திருடிக் கொண்டான்...

அவன் மட்டுமே... அவளருகே வந்து... காதோரமாய்... 'காலம் பூராவும் நான் உன்னுடன் இருப்பேன்...' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும்... அவளை விட்டு விலகி நின்று வேடிக்கை பார்க்கும் தூக்கமும் அமைதியும் அவளிடம் ஓடி வந்து விடும்...

புரியாதவரை அவன்? அவள் மனதில் அவன் மேலிருக்கும் கடலளவு காதலையும் அன்பையும் தெரியாதவனா அவன்? அவளது ஆசையின் ஆவேசத்தை அறியாதவனா அவன்?

புரிந்தும்... அறிந்தும்... தெரிந்தும்... கைகளுக்கு எட்டாமல்... தொலைதூர தொடுவானாய் அவன் விலகிச் செல்வதன் காரணம்என்ன?

இரவைக் கடக்க அவள் படாதபாடு பட்டாள்.

**ம**றுநாள் முழுவதும் அவளது மனம் அடித்துக் கொண்டது. மாலையில் கடற்கரையில் காத்திருக்கும்போது... 'அவன் வருவானா? இன்றாவது தரிசனம் தருவானா?' என்று மனம் தவித்தது.

'நானாக... நானில்லை...

நீயாக... ஏன் மாறிப் போனேன்?'

நெஞ்சம் கேள்வி கேட்டபடி... தூரத்தில் அவன் முகம் கண்களுக்கு தட்டுப்படுகிறதா என்று தேடியது...

'ஒருவேளை... நேற்றுப் போலவே... இன்றும் அவன் வராமல் போய் விட்டால்?''

நினைக்கும்போதே அவளது நெஞ்சம் நடுங்கியது... கண்களில் கண்ணீர் முத்துக்கள் தோன்ற... இமைகளைச் சிமிட்டி அதை அடக்கிக் கொண்டாள்.

*'காதலித்துப் பார்...*
*சொர்க்கமோ... நரகமோ...*
*அது உனக்கு... இங்கேயே தெரியும்...!'*

வைரமுத்துவின் கவிதை வரிகளை உணர்வுபூர்வமாய் இன்று உணர்ந்தாள் ராதா... இது என்னவரி...? இதயத்தைக் கொல்லும் வரி... மனதில் ஒரு கூரிய முள் எப்போதும் குத்திக் கொண்டிருக்கும் ரண வலி... அவன் அருகிலிருக்கும்போது... அவன் குரலைக் கேட்கும் போது சொர்க்கத்தை உணர்த்தி... அவனது அருகாமை விலகியபோது - அவன் குரலைக் கேட்க முடியாதபோது... நரகத்தை உணர்த்தும் வலி...

ராதா மனதின் வலியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் ரண வேதனைப்பட்டாள்... மனம் சுமக்கின்ற பாரத்தை இறக்கி வைக்க முடியாமல் மனம் கனத்தாள்...

சுமையாகிப் போன மனத்துடன்... தொலை தூரத்தில் அவன் வருகையைத் தேடித் தவித்துக் கொண்டிருந்தபோது தூரத்தில் அவன் முகம் தெரிந்தது...

அவ்வளவு நேரமும் மனதை அரித்துக் கொண்டிருந்த வேதனை மறைய... ராதா முகம் மலர்ந்தாள்...

*'தூரத்தில் நான் கண்ட உன்முகம் - நதி*
*தீரத்தில் தேன் உண்ட என் மனம்...'*

அவளது மனம் பாடியது... அவன் அருகில் வரும்வரை மூச்சடக்கி காத்திருந்தாள்... பக்கத்தில் வந்தவனின் தோள் தழுவி... அவனது முகம் பூராவும் முத்தமிட வேண்டும் என்ற தாளமுடியாத தாபம் அவளுள் கிளர்ந்தது.

*'எனக்கு நீ வேண்டும்...*
*நீ மட்டும்தான் வேண்டும்...*
*என் மற்றய ஆசைகள் எல்லாம்...*
*பொய்மையானவை... வெறுமையானவை...*
*இரவும்... பகலும் என்னை*
*அலைக்கழிப்பவை...*
*வெளிச்சத்தை தன்னுள்ளே...*
*அடக்கிக்கொண்டிருக்கும் இரவைப்போல...*
*ஒரு குரல்... ஒலித்துக் கொண்டே இருக்கிறது*
*எனக்கு நீ வேண்டும்...*
*நீ மட்டும்தான் வேண்டும்...'*

அவள் இதயம் கீதாஞ்சலி சொன்னது... அவன் அருகே வந்துவிட்டான்... அவள் பரபரப்புடன்... பரவசத்துடன்... அவன் முகம் பார்க்கையில்... பேச வார்த்தைகள் வராமல்... வார்த்தைகளைத் தேடி அவள் தவித்து நிற்கையில்... அவன் கைக்கெடிகாரத்தில் மணி பார்த்தான். ஏதோ ஒரு வேலையை முடிக்கும் முகபாவனையில் அவள் முகம் பார்த்தான். பின் சொன்னான்.

"ஐஸ்ட் ஃபைவ் மினிட்ஸ்தான் உன்னோடு ஸ்பென்ட் பண்ண முடியும்... எனக்கு வேலை தலைக்கு மேல் இருக்கிறது..."

பாலாய் பொங்கியிருந்த ராதாவின் உணர்வுகள் போன இடம் தெரியாமல் - தண்ணீர் பட்ட பாலாய் - அடங்கிப் போயின...

'இவ்வளவுதானா... இவ்வளவேதானா? உன்னைப் பார்க்கும் இந்த விநாடியில் நான் உயிர்த்தெழும்போது

என்னுடன் இருக்கும் நேரங்களை நீ எண்ணிச் சிக்கனமாய் செலவழிக்கிறாயா? உன்னை நான் நினைப்பதுபோலக்கூட நீ என்னை நினைக்க வேண்டாம். என் உயிர் மூச்சாய் நீ இருப்பது போலக்கூட - நான் உன் உயிரில் கலக்க வேண்டாம்... உன் இதயத்தில் எனக்காக ஒரு சிறு இடம் கூட இல்லையா?'

ராதா மனம் உடைந்தாள். யதுநந்தன் உட்காரக்கூட நேரமில்லாதவனாய்... கை கட்டிக் கொண்டு அவளைப் பார்த்துக் கேட்டாள்.

"ம்ம்... அப்புறமா? என்ன விசயம்னு சொல்லு..."

எதைச் சொல்வது? அவள் உள்ளத்தில் உறைந்து நின்று அவள் உயிரைக் குடிக்கும் காதலை... ஐந்தே நிமிட அவகாசத்தில் எப்படி அவனிடம் விளக்குவது? நாற்பத்தி எட்டு மணி நேரமாக ஊன் உருக அவள் துடித்த துடிப்பை... கைக்கடிகாரத்தில் மணி பார்த்துக் கொண்டு நிற்பவனின் செவியில் எப்படி சேர்ப்பது?

ராதா உணர்ச்சிப் பிழம்பாய் உதடு கடித்தாள்... எதிரே நிற்பவன் அவள் மனதிற்கு இனியவன்... அவள் முகம் பார்க்கத் துடிக்கும் முகத்தைக் கொண்டவன்... ராதா பொறுமை காத்தாள்.

## 9

*"உன்னோடு வாழாத...*
*வாழ்வென்ன வாழ்வு...*
*என் உள் நெஞ்சம்...*
*கேட்கின்றது..."*

அருகயிருந்த தள்ளுவண்டியிலிருந்து எஃப்எம் ரேடியோவின் பாடல் காற்றில் கலந்து வந்து ராதாவின் காதுகளில் நுழைந்தது... அவள் கொதிக்கும் மனத்தைக் கொஞ்சம் குளிர வைத்தது...

அலட்சியப் பார்வையுடன் நின்றிருந்த யதுநந்தனின் தோள் சாய்ந்து... அந்தப் பாடலைப் பாடிவிட வேண்டும்... அவனோடு வாழ்ந்து விடவேண்டும்... என்ற தவிப்பு அவள் மனதில் புயல்போல் உருவானது.

'நான் யதுநந்தனின் மனைவி...' மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்... சொல்லும்போதே மனம் இனிக்க - அவனது புறக்கணிப்பை புறக்கணித்து... அவன் முகம் பார்த்து ஏங்கி நின்றாள்.

"இவ்வளவு நேரமும் நான் சொன்னது உன் காதில் ஏறவே இல்லையா ராதா... நான் சீக்கிரம் போகவேண்டும்..."

"நேற்று சாயந்திரம் முழுவதும்... நான் உங்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன்..."

"எனக்கு வேலை இருக்குதும்மா..."

"அதற்காக... என்னை மறக்கலாமா?"

"ம்ச்ச்... ஒருநாள் உன்னைப் பார்க்க வரவில்லைன்னா நான் உன்னை மறந்து விட்டேன்னு அர்த்தமாகி விடுமா?"

"காலையில்... உங்கள் வீட்டிலிருந்துதானே கிளம்பினீங்க?"

"ஆமாம்... யாமினியை காலேஜில் விட்டுவிட்டு கம்பெனிக்கு போனேன்..."

"ஓ..."

இருட்டும் வரை அவனை எதிர்பார்த்து... அவன் குரல் கேட்க அவள் தனியே தவித்து நிற்பாளே என்று அவனுக்கு ஒரு கணம்கூட நினைவுக்கு வரவில்லை. ஆனால் அவனுடைய தங்கையை மட்டும் பொறுப்பாக கல்லூரியில் சேர்க்கும் கடமை நினைவுக்கு வந்திருக்கிறது...

ராதாதான் அநாதையாகிவிட்டது போல் உணர்ந்தாள். அவன் அருகிலிருக்கும் உரிமை தனக்கு இல்லை என்பதை அறிந்ததினால் ஏற்பட்ட தனிமை உணர்வு அவள் மனதில் கவிழ்ந்தது...

'நான் உன் குடும்பத்தில் ஒருத்தியில்லையா? உன் குடும்பம் வேறு... நான் வேறா? நான் அப்படி நினைக்கவில்லையே...! நீ வேறு. நான் வேறு... உன் குடும்பம் வேறு... என் குடும்பம் வேறு என்ற எண்ணமே எனக்கு வந்ததில்லையே...! நீ மட்டும் ஏன்... என்னைப் பிரித்து நினைத்து விட்டாய்?'

"நந்து... நீங்கள் என்னை விட்டு விலகிப் போவது போல எனக்கு இருக்கிறது..."

"ஏன்? எனக்கு வேலை அதிகம் ராது... புரிந்துகொள்..."

"எனக்கும் வேலையிருக்கிறது நந்து... எம்எஸ்ஸி ஃபைனல் இயர் எக்ஸாம் ஸ்டார்ட் ஆகிவிட்டது. நாளைக்கு ஃபர்ஸ்ட் எக்ஸாம்... நான் உங்களுக்காக இங்கே நிற்கிறேன்..."

"உன்னை யார் இந்த மாதிரி... பைத்தியக்காரத்தனமான வேலையைப் பார்க்கச் சொன்னது..."

"நான் பைத்தியக்காரியா?"

"பின்னே இல்லையா... விடிந்தால் பரீட்சை... நீ இங்கே வந்து நின்று கொண்டிருந்தால்... உன்னை வேறு எப்படித்தான் நான் சொல்வது?"

'உனக்கு இதுதான் தெரிகிறதா? என் மனதில் உள்ளேயிருக்கும் காதல் தெரியவில்லையா...'

"ஓ... கே... போகலாமா?"

"அதற்குள்ளாகவா? இப்போதுதாமே வந்தீங்க?"

“ஐந்து நிமிடம்தான் இருக்க முடியும்னு சொன்னேனா... இல்லையா? இப்போது பத்து நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது... இன்றைக்கு இது போதும்... கிளம்பு...”

“போதுமா... இது போதுமா... இரண்டு நாள்கள் தவித்து இருந்தவளுக்கு... இந்த நொடிப் பொழுது போதுமா...”

“இன்னும் கொஞ்ச நேரம் இருக்கக்கூடாதா?”

“ம்ச்ச்... எனக்கு வேலையிருக்கும்மா...”

‘எனக்கு மட்டும் இல்லையா’ என்று கேட்கத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் ராதா... கேட்டால் ‘நீ உன் வேலையைப் பார்க்க வேண்டியதுதானே... படிப்பை விட்டு விட்டு... ஏன் பைத்தியம் போல் இங்கே வந்து நிற்கிறாய்’ என்று கேட்டு வைப்பான் என்பதால்... வாயை இறுக மூடிக்கொண்டாள்...

“வா... உன்னை வீட்டில் டிராப் பண்ணி விடுகிறேன்...”

“வேண்டாம்... நான் போய்க் கொள்கிறேன்...”

“இருட்டில் எப்படி தனியாகப் போவாய்?”

“அது என் கவலை... நீங்க வீணாய் கவலைப்பட வேண்டாம்...”

“இப்போ... என்னிடம் அடிதான் வாங்கப் போகிறாய்... ஏறுடி வண்டியில்...”

அவன் அடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அந்த நொடியில் அவளுக்குத் தோன்றியது. உரிமையுடன் கூடிய இந்தக் கோபத்திற்காகத்தானே அவள் ஏங்கி நிற்கிறாள்...

“நேற்றும் இருட்டி விட்டது நந்து... நான் தனியாகத்தான் இங்கே உட்கார்ந்திருந்தேன்... ரொம்ப நேரம்... உங்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன்...”

"அறிவைக் கடன் கொடுத்துவிட்டாயா? இல்லை... அறிவு என்பதே உனக்கு இல்லையா?"

"நந்து..."

"இருட்டுகிற வேளையில் தனியாய் உட்கார்ந்திருந் தேன்னு சொல்கிறாயே... ஏதாவது ஒன்றுகிடக்க... ஒன்று ஆகியிருந்தால் என்ன செய்வது?"

"என்னைப் புதைத்த இடத்தில் புல் முளைத்திருக்கும்... எனக்காக நீங்கள் இரண்டு சொட்டு கண்ணீரை செலவழித்துவிட்டு... மணியைப் பார்த்துக் கொண்டு ஓடியிருப்பீர்கள்."

"நீ எதற்கு என்னை வரச்சொன்னாய்?"

"உங்களைப் பார்க்க... பேச..."

"இதுதான் நீ பேசும் லட்சணமா?"

"எனக்கு இப்படித்தான் பேசத் தெரியும்..."

"மாற்றிக் கொள்..."

"ஏன்... நான் என்ன தப்பாகச் சொல்லிவிட்டேன்?"

"சண்டைபோடத்தான் நாம் இங்கே வந்திருக்கிறோமா?"

அவன் எரிச்சலுடன் வினவ... அவள் உள்ளம் நைந்தாள்... 'இல்லையே... உன்னோடு சிரித்துப் பேச ஆசைப்பட்டுத்தானே இங்கே வந்தேன்... உன்னுடன் ஒரு வினாடி பேசிவிட்டால்... விடியும் வரை என் படிப்பை விழித்திருந்து படிக்கும் ஜீவசக்தி எனக்குக் கிடைத்துவிடும் என்பதால்தான் ஓடி வந்தேன்... உன்னுடன் சண்டை போட்டுவிட்டு... ஒரு வினாடி... என்னால் நிம்மதியாய் இருந்துவிட முடியுமா? ஏன் என் மனதைப் புரிந்துகொள்ள மறுக்கிறாய்?'

"வா... ராதா... என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்..."

"ஒரு கவிதை மனதில் தோன்றியது... சொல்லவா..."

"வேண்டாமென்றால்... நீ விட்டுவிடப் போகிறாயா? சீக்கிரம் சொல்லு..."

'அதையும் சீக்கிரமாய்த்தான் சொல்ல வேண்டுமா?' மனதில் சலிப்பு வந்தது...

*'வாழ்வினிலே பகை யாவும் வென்று...*
*வாழ்ந்திடவே மனத்திண்மை உண்டு...*
*நீயோன் பகையாய் மாறியதைக் கண்டு*
*என்நெஞ்சம் உடைந்து நொறுங்கியது*

இன்று..."

"அட.... கவிதை சூப்பராக இருக்கே... நீ எழுதியதா? இல்லை எங்கேயாவது சுட்டாயா?"

இவன் மாறவே மாட்டான் என்று அவளுக்குத் தோன்றியது... அவளைத்தான் மாற்றப் பார்ப்பான்...

"நேரமாகும்... நீ வீட்டுக்குப் போன்னு ஒரு ஃபோன் பண்ணிச் சொல்லியிருக்கலாமே நந்து..."

"நேற்றைக்குக் கதை நேற்றோடு... அதைவிட்டு விடுகிறாயா? ஐந்து நிமிடம்... ஐந்து நிமிடம்னு சொல்லி அரை மணி நேரமாகிவிட்டது... கிளம்பு தாயே..."

வேறு வழியின்றி அவன் பின்னால் ஏறி உட்கார்ந்தாள் ராதா... வழியெல்லாம் அவன் எதையோ பேசிக்கொண்டே வர... ராதா 'ஊம்' கொட்டிக் கொண்டிருந்தாள். அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே.... இப்படியே எங்காவது போய் விடலாமா என்று தோன்றியதை வெளியே சொல்லாமல்... மனதிற்குள்ளேயே அழித்தாள்.

அவனிடம் சொன்னால்... அதற்கும் எதையாவது சொல்வான்... அதற்குப் பேசாமல் இருந்து விடுவதே நல்லது என்று நினைத்தவாறு... தெருமுனையில் இறங்கிக் கொண்டாள் ராதா...

"பை..."

"பை..."

வீட்டை நோக்கி நடந்தபோது... திரும்பி அவனை ஒருமுறை பார்க்க வேண்டுமென்று அவளுக்குள் தோன்றியது... திரும்பிப் பார்த்தாள்... அவன் யாருடனோ... செல்ஃபோனில் பேசிக்கொண்டு நின்றிருந்தான்...

'இதற்கு மட்டும் நேரமிருக்கிறதா...' மனதிற்குள் குமைந்தாலும்... அவன் அங்கே நின்று கொண்டிருக்கும் போது... விட்டுப் போக மனமில்லாமல்... நின்று விட்டாள் ராதா...

ஃபோனை அணைத்து சட்டைப் பைக்குள் போட்டுவிட்டு வண்டியைக் கிளப்பப்போன யதுநந்தன் ராதாவைக் கவனித்துவிட்டான்.

'இவள் இன்னும் போகவில்லையா...' அவன் மனம் கனிந்தது. அவளைக் கையசைத்து... அருகே அழைத்தான்...

அவசரமாய் முகம் மலர ஓடி வந்தவளைப் பார்த்தபடி வண்டியை விட்டு இறங்கியவன்... தெருமுனையின் மரத்தின் கீழிருந்த இருட்டிற்குள் ஒதுங்கி நின்று... அவனை நோக்கி கை நீட்டினான்.

ராதா நம்ப முடியாத ஆனந்தத்துடன்... அவனது கைகளுக்குள்... புகுந்து அவன் மார்பில் புதைந்தாள்... அவள் முடி கோதி... காதோரமாய் முத்தமிட்டான்...

“போக மனமில்லையா?” என்று வினவினான்...

“ம்ம்ம்...” ராதாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“ம்ச்ச்... அழக்கூடாது... நான் என்ன வேண்டுமென்றா செய்தேன்? வேலையிருந்ததுடி...”

அந்த ஒரு வார்த்தையில் மனம் நிறைய விம்மி அழுதாள் ராதா... அவள் மனம் நிறைந்து விட்டிருந்தது...

## 10

எல்லாமே நீயென்று... கடவுளிடம் சரண் புகுந்ததைப் போலத் தன் காதலனிடம் சரண் புகுந்திருந்த ராதாவின் நெற்றியில் சின்னதாக முத்தமிட்டு. அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான் யதுநந்தன்.

“உன்னைக் காதலிக்கிறேனாட... இல்லையான்னு ஆரம்பத்தில் எனக்குப் பிடிபடவில்லை ராதா... ஆனால்... மெல்ல... மெல்ல... உன்னைக் காதலிக்க ஆரம்பித்து விட்டேன்... புரிந்துகொள்...”

“ம்ம்ம்...”

“எனக்கு வேலை அதிகம்... அதனால் உன்னை மறந்து விட்டேன்னு நினைக்கலாமா?”

“ம்ம்ம்...”

“இப்படி அழுமூஞ்சியாய் நிற்காமல் சிரித்துக் கொண்டே டாட்டா சொல்லு... இந்த இருட்டு நேரத்தில் மரத்தடியில் நாம் அதிகம் நேரம் நிற்கக் கூடாது...”

“ம்ம்ம்...”

“குட் கேர்ள்...”

அவளது முகம் மறைத்து கலைந்திருந்த முடியைக் கோதி விலக்கிவிட்ட யதுநந்தன்...

"போய் வரட்டுமா?" என்றான்...

அவ்வளவு நேரமும்... அவன் கூறியதற்கெல்லாம் கட்டுப்பட்டவன் போல் தலையை ஆட்டிய ராதாவின் மனம் அதிர்ந்தது...

'கிளம்பிப் போய் விடுவானா...' அவள் மனம் அடம்பிடித்தது...

அவளது மனத்தை உணர்ந்தவனாய் அவளது கன்னம் தட்டிச் சிரித்தாள் யதுநந்தன்...

"காலையில் எக்ஸாம் இருக்கு... போய் படி... இன்னும் கொஞ்ச நாள்தான்... யாமினிக்கும்... இது ஃபைனல் இயர் எக்ஸாம்... அவளுக்கு கேம்பஸ் இண்டர்வியுவில் வேலை கிடைத்திருக்கு... கொஞ்ச நாளில் அவள் மேரேஜ் முடிந்துவிடும்... அடுத்த முகூர்த்தத்தில் உன் கழுத்தில் தாலியைக் கட்டி... என் வீட்டிற்கு அழைத்துப் போய் விடுகிறேன்... சரியா?"

'இப்போதே ஒரு மஞ்சள் கயிறில்... சிறு மஞ்சள் துண்டைக் கட்டி, என் கழுத்தில் கட்டிவிடு... உன் பின்னாலேயே நானும்... உன்னோடு வந்து விடுகிறேன்...' என்று சொல்லத் துடித்தது அவள் மனது...

அதைச் சொல்லாமல் சிரித்தபடி கை அசைத்தாள் ராதா... அவன் கிளம்பிச் சென்றதும். அந்தத் தெருவிலே வெறிச்சிட்டது போல உணர்ந்தாள்... ஆள்கள் வந்து போய்க்கொண்டிருந்த சாலையில்... ஒரு அநாதைபோல வீட்டிற்கு வந்தாள்.

"தினமுமா... உன் ஃப்ரெண்டுடன் குரூப் ஸ்டடி பண்ணுகிற?" மந்தாகினி சந்தேகத்துடன் மகளை வினவினாள்.

"ஆமாம்மா..." சோர்வாக பதில் சொல்லியபடி குளியலறைக்கு புகுந்துகொண்டாள் ராதா.

"அவளை ஏன் கேள்விகேட்டு தொந்தரவு செய்கிற?" அப்பா கண்டிக்கும் குரலொளி கேட்டது...

"அதற்கில்லைங்க..." மந்தாகினி மறுத்துப் பேசினாள்.

"நீ எதற்காகச் சொன்னாலும்... இப்போது அதைச் சொல்லாதே... இது எக்ஸாம் டைம்... அவள் படிக்க வேண்டாம்மா?" அப்பா எடுத்துச் சொன்னார்...

முன்னறையில் பெற்றவர்கள் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தது ராதாவின் காதினில் விழத்தான் செய்தது... அவள் சீக்கிரமாக வந்திருந்தால்... இதைத் தவிர்த்திருக்கலாம்... அவளால்தான் அதைச் செய்ய முடியவில்லையே...

ஆழ்ந்த பெருமூச்சுடன்... முகத்தை துடைத்துக் கொண்ட ராதா... புத்தகங்களை முன்னால் பரத்திக் கொண்டு அமர்ந்தாள்...

"காபி குடி..." மந்ஙதாகினி கோபம் மாறாத முகத்துடன் அவளிடம் காபியை நீட்டினாள்.

"ஸாரிம்மா... என் மேல் கோபமா?"

"உன் அக்கா ஸ்வேதாவும்தான் படித்தாள். வேலைக்குப் போனாள்... ஒருநாள்கூட லேட்டாக வந்ததில்லை ராதா..."

"அதுதான் நான் 'ஸாரி சொல்லி விட்டேனே..."

"அவளுக்குக் கல்யாணமாகிப் போகும்வரை... உன்னைப் போல் இப்படி அவள் கலங்கடித்ததில்லை..."

"இப்ப எதுக்கும்மா... எதையெதையோ பேசுறீங்க?"

"நீ பேச வைக்கிறாயே..."

மந்தாகினி அறைக் கதவை ஓங்கிச் சாத்திய வேகத்தில் அவளது கோபத்தின் பரிமாணம் வெளிப்பட்டது. ராதாவின் கண்கள் கலங்கின... தாயின் கோபத்தில் இருந்த நியாயத்தை அவள் உணராமல் இல்லை...

'நந்து கொஞ்சம் சீக்கிரமாக வந்து பேசிப் போகலாம்... ஒரு பெண்ணிற்கான சுதந்திரம் வரையறுக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்திற்குள் பார்த்துவிட்டால் தேவைலன்னு அவனிடம் யார் சொல்வது...' ராதா பெருமூச்சு விட்டாள்.

சொன்னால் கோபித்துக்கொள்வான்... 'நீ சொல்கிற நேரத்திற்கு எல்லாம் என்னால் வரமுடியாது என்பான்... அதிகம் பேசி விட்டால்... அவளையே எதிரியைப் பார்ப்பது போல் பார்க்க ஆரம்பித்து விடுவான்...

'அவனது கோபத்தை தாங்கிக்கொள்ளும் அன்பு கொண்ட ராதாவிற்கு... அவளது எரிச்சலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லையே...

ராதா படிப்பில் கவனத்தைச் செலுத்த முயன்றால். யதுநந்தனின் நினைவுகளைப் புறம்தள்ள முடியாவிட்டாலும்... சீக்கிரத்தில் அவள் படிப்பில் ஆழ்ந்துபோனாள்...

புதிதாக கார் வாங்கியிருந்தான் யதுநந்தன். கோவிலுக்கு போய்விட்டு... அதே சந்தோஷத்துடன்... கம்பெனியை நோக்கி காரைச் செலுத்தும்போது, வழியில் ஆட்டோவை அழைத்துக் கொண்டிருந்த முரளியைப் பார்த்தான். அவன் அருகில் காரை நிறுத்தி...

"ஏறிக்கடா..." என்றான்...

"இது உன் காரா?"

"ஆமாம்."

“சொல்லவே இல்லை.”

“இப்போதுதான் சொல்லிவிட்டேனில்ல... பேசாமல் வா...”

“என்னவோ போடா யது... புதுகாரு... புது காதலினு கலக்குற போ...”

“புது காதலியா? அவள் பழைய காதலிடா... என்னையும் உன்னைப் போலன்னு நினைத்து விட்டாயா?”

“எனக்கு மட்டும் என்ன... மாதத்திற்கு ஒரு காதலியை மாற்றணும்னு வேண்டுதலா? அது என்னவோ... எனக்கென்று - அடுத்தவனுக்கு நிச்சயம் பண்ணின பெண்களாகப் பார்த்து காதலியாய் மாட்டித் தொலைக்கிறாங்க... அதுக்கு நான் என்னடா பண்ண?”

“அந்த மட்டிலும்... ‘உன்னை என் அண்ணனாக நினைக்கிறே’னு யாரும் சொல்லிவிடவில்லையே...”

“நான் சொல்ல விடவில்லை... கபால்னு கையெடுத்து கும்பிட்டு... அம்மா தாயே... வாயைத் திறக்காம இடத்தைக் காலி பண்ணுன்னு கட்அண்ட் ரைட்டா சொல்லிவிடுவேன்...”

“அது சரி... நீ எப்போ கார் வாங்கப் போகிற?”

“கூடிய சீக்கிரம் வாங்கிவிட வேண்டியதுதான்... சுபாகூட... ‘நீங்க காரில் வந்தால்... எனக்குப் பெருமையாயிருக்கும் முரளி’ன்னு சொன்னாள்...”

“சுபான்னா சொன்னே?”

“ஆமாம்... அதுக்கென்ன இப்ப?”

“அடப்பாவி... அந்த பிட்டு... இன்னும் ஓடுதா?”

“வாழ்க்கை பூராவும் ஓடும்ன்னு நினைக்கிறேன்...”

“நீ ஒவ்வொரு தடவையும் இந்த டயலாக்கைத்தான் மறக்காமல் சொல்கிற...”

"இந்தத் தடவை வெற்றி நிச்சயமடா..."

"பார்த்துடா மச்சான்... அவள் என் முகத்திலேயே கரியைப் பூசினவள். ஜாக்கிரதையாய் இரு..."

"என் முகத்தில் காதலைத்தான் பூசுவாள்..."

"நம்பிக்கை? ம்ஹூம்... நீ திருந்தவே மாட்டே...."

"நான் ஒருத்தன் திருந்தாவிட்டால்... இந்த உலகத்திற்கு ஒன்றும் நஷ்டம் வந்துவிடாது..."

"எப்படியோ... நீ நல்லா இருந்தால் சரிதான்... எனக்கு வேறென்ன வேண்டும்?"

"என் கதையை விடு... உன் கதைக்கு வா... அதுதான் காதலில் மூழ்கி கரை சேர்ந்திட்டீங்களே.. காலாகாலத்தில் கல்யாணத்தைப் பண்ணிக்கொள்ள வேண்டியது தானே...?"

"யாமினியின் கல்யாணம் முடிய வேண்டாமா?"

"அதற்காக நீ உன் கல்யாணத்தை தள்ளிப் போடுகிறாயா? என் கதையைப் பார்த்த பின்னாலுமா... இப்படி விஷப் பரீட்சையில இறங்கியிருக்கிற... அவள் பாட்டுக்கு ஒருநாள் கல்யாண இன்விடேஷனை நீட்டித் தொலைத்து விட்டால்... என்னடா செய்வே?"

சரக்கென்று காரை பிரேக்கடித்து நிறுத்தினான் யதுநந்தன்... அவன் முகத்தில் கோபம் கொந்தளித்தது.

"இறங்குடா..." என்றான்...

"யது... இட்ஸ்... ஜஸ்ட் பார் ஃபன்..."

"விளையாட்டுக்குப் பேசினாயா? எதில்தான் விளையாடு வது என்று ஒரு விவஸ்தையில்லையா? நீ ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் முரளி... நான் அவளைவிட்டு விலகினாலும்... அவள் என்னைவிட்டு விலகமாட்டாள்."

"யது."

"ஏய்... எனக்கு காதல் மீது நம்பிக்கை கிடையாதுடா... அந்தக் கல்யாண மண்டபத்தில் எனக்கு அவள் மேல் ஒரு ஈர்ப்பு வந்தது என்னவோ உண்மைதான்... பழகிப் பார்க்கத்தான் முதலில் நினைத்தேன்... அவளுடன் பழகிய பின்னால்... விலகிவிட என்னால் முடியவில்லையடா..."

"நான் சொன்னதைப் போய் இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளணுமாடா... நீ இப்படியெல்லாம் டென்சன் ஆக மாட்டாயே..."

"மாட்டேன்தான்... ஆனால் ராதா விசயத்தில் டென்சன் ஆவேன்... அவள் இவ்வளவு தீவிரமாய் என்னைக் காதலிக்க ஆரம்பிப்பாள் என்று கனவிலும் நான் நினைக்கவில்லைடா... அவளின் ஆவேசமான அன்பை உணர்ந்தவன் நான்... அவளால் காதலிக்கப்படுவது எனக்குப் பிடித்திருக்கிறது... ஆனால், எந்த நொடியில் அவளை நான் காதலிக்க ஆரம்பித்தேன்னு எனக்கே தெரியவில்லை."

"உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன் யது... அதிகமான அன்பை அவள் மீது வைக்காதே... ஒருவேளை... பிரிவு வந்து விட்டால்... அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவத்தை உனக்குள் வளர்த்துக் கொள்..."

முரளியின் வார்த்தைகளில் வெளிப்பட்ட பொறாமையை யதுநந்தன் சட்டென்று புரிந்து கொண்டான்.

"இந்தக் கவலையே உனக்கு, வேண்டாம் முரளி... என்னைத் தவிர... இன்னொருவனை அவள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள். ஒருவேளை நான் அவளைவிட்டு விலக நினைத்தேன்னு வை... அந்த நொடியில் அவள் உயிரை விட்டுவிடுவாள்..."

# 11

**ஏ**தையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாமல்... விளையாட்டுத்தனத்துடன் எதிர்கொள்ளும் யதுநந்தன்... இவ்வளவு தீவிரமான முகபாவத்துடன் பேசவும்... முரளிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"சரி... சரி... விடு... ஏதோ... தெரியாமல் பேசிவிட்டேன்."

முரளி சமாதானமாகக் கூறினாலும்... யதுநந்தனின் மனம் சமாதானம் அடையவில்லை.

'இவன் எப்படி, அப்படியொரு வார்த்தையைச் சொல்லலாம்...' என்ற கோபம் அவனுக்குள் கனன்று கொண்டிருந்தது.

கம்பெனி வாசலில் காரை நிறுத்தி விட்டு இறங்கிய யதுநந்தன் ஆச்சரியப்பட்டுப் போனான்... அங்கே சுபாவும்... ராதாவும் நின்றிருந்தார்கள்.

"ஏய்... என்ன இது... இங்கேயே வந்துவிட்ட?" அவன் உற்சாகமாய் விசாரித்தபடி ராதாவின் அருகே சென்றான்.

"ஹலோ... இங்கே நானும்தான் நிற்கிறேன்... அவளை மட்டும்தான் உங்க கண்ணுக்குத் தெரியுமா... என்னைத் தெரியாதா?" சுபா, பொய்க் கோபத்துடன் கேட்டாள்.

"ஏன் தெரியாமல் போகிறது? உங்களைப் பார்த்தவுடன் அடடா... இன்றைக்கு கார் வாங்கிட்டோமுன்னு ஹெல் மெட்டை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டோமே'னு கவலையில்லை வந்துவிட்டது."

"யார் கவலைப்படுவது? நீங்களா? கவலைப்படும் மூஞ்சிகளே வேறு... உங்கள் மூஞ்சி... என்ன மாதிரியான மூஞ்சி...!"

சுபாவின் குரலில் மர்மமான கேலி இருந்தது. யதுநந்தன் சிரித்துக் கொண்டே....

"சரியான குரங்கு வில்லன் மூஞ்சி..." என்றான்...

"நினைவிருக்கிறதா?" சுபா விழி மலர்த்தி சிரித்தாள்.

"பின்னே... ஹெல்மெட்டை ஏன் தேடினேன்னு நினைத்தீங்க... நீங்க வீசும் கரிப்பொடியிலிருந்து தப்பிக்கத்தான்..."

இப்போது ராதாவும் அவர்களின் சிரிப்பில் சேர்ந்து கொள்ள... சிரித்து முடித்த யதுநந்தன் கேட்டான்...

"எங்கே இந்தப் பக்கம்? மிச்சம் மீதி இருக்கிற கரித்தூளை வேஸ்ட் பண்ணக் கூடாதுன்னு பொட்டலம் போட்டு எடுத்துக்கிட்டு என்னைத் தேடி வந்தீங்களா?"

அதுவரை... ஸ்டைலாக போஸ் கொடுத்து நின்றபடி சுபாவை காதல் பார்வை பார்த்துக் கொண்டிருந்த முரளிக்கு கோபம் வந்துவிட்டது.

"அது என்னடா... யாரைக் கண்டாலும்... அவங்க உன்னைத் தேடித்தான் வந்தாங்கன்னு... நீயாய் நினைத்துக் கொள்கிற... சுபா... என்னைத் தேடி வந்திருக்கிறாங்க... இல்லையா சுபா?"

"யெஸ்... யு ஆர் கரெக்ட்... நான் உங்களையும்தான் பார்க்க வந்தேன்..."

"அது என்ன 'உங்களையும்தான்'னு ஒரு இக்கன்னா போடுகிறீங்க... உங்களைத்தான் பார்க்க வந்தேன்னு... தெளிவாய் சொல்லுங்க..."

"நான் தெளிவாகத்தான் சொல்கிறேன்... எனக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகிவிட்டது. இன்விடேஷன் கொடுக்கத்தான் நான் இங்கே வந்தேன்... யதுநந்தன் எங்களுக்கு உறவுக்காரர். அவருக்கு இன்விடேஷன் வைக்க ராதாவை துணைக்கு கூப்பிட்டுக்கொண்டு வந்தேன்... இங்கே நீங்களும்

இருக்ககுறீங்க... உங்களுக்கும் ஒரு இன்விடேஷனைக் கொடுத்து விட்டுப் போகலாமன்னு நினைத்தேன். அதைத்தான் சொன்னேன்..."

"அடடா... முரளி... உன் ராசி... இங்கேயும் வொர்க் அவுட் ஆகிவிட்டதா?"

யதுநந்தன். முரளியின் காதில் சன்னமாக வினவ... அவன் முகம் போன போக்கைப் பார்க்க... யதுநந்தனுக்கே சகிக்கவில்லை...

"நீங்கள் கட்டாயம் வரவேண்டும்..." சுபா கல்யாண அழைப்பிதழை முரளியிடம் நீட்டினாள்.

அவன் வாங்காமல் நிற்க... யதுநந்தன் இயல்பாக வாங்குவது போல்... அதையும் வாங்கிக்கொண்டான்.

"ஹலோ... ஹலோ... சிக்னல் கிடைக்கவில்லையே..." என்றபடி முரளி அந்த இடத்தை விட்டு விலகிவிட்டான்.

"அப்புறம்... எப்போது... நீங்களும்... ராதாவும் எங்களுக்கு கல்யாணச் சாப்பாடு போடப்போறீங்க?" சுபா உரிமையுடன் வினவினாள்.

"இப்போதுதானே படித்து முடித்திருக்கிறாள்... முதலில் ஒரு வேலையைத் தேடிக் கொள்ளட்டும்..."

"ஏன் சார்... வேலைக்குப் போனால்தான் நீங்கள் கல்யாணம் பண்ணிக்கொள்வீங்களா?"

"அதற்குள் சண்டைக்கு வர வேண்டுமா? சும்மா வீட்டில் இருந்தால் தேவையில்லாத சிந்தனைகள் வரும் அது எதற்கு? படித்த படிப்பு வீணாகாமல் வேலைக்குப் போவது நல்லதுதானே... பெண்கள் தன் காலில் நிற்பது அவசியம்ங்க..."

"ஏண்டி... ராதா... நீ இப்போது உன் காலில்தானே நிற்கிறாய்?"

சுபா ராதாவின் காலைப் பார்க்க...

"சந்தேகமிருந்தால் நன்றாகப் பார்த்துக்கொள்... நான் என் காலில்தான் நிற்கிறேன்..." என்று அவள் கால்மாற்றி நின்று காட்டினாள்.

அவர்கள் மூவரும் சிரித்த சிரிப்புச் சத்தம் முரளியின் காதில் நாராசமாய் வந்து விழுந்தது.

அவன் மறைவில் நின்று கவனித்தான்... ராதாவின் பார்வை...ஆசையுடன் யதுநந்தனின் மீது படிந்து விலகுவதையும்... அவளது பார்வைக்கு சளைக்காமல் யதுநந்தன் பதில் பார்வை கொடுப்பதையும் பார்த்து முரளி முகம் கடுத்தான்.

'இவனுக்கு மட்டும் எல்லாமே கை கூடி விடுகிறது...'

பொறாமை என்பது... மற்றவரை மட்டுமல்ல... பொறாமை கொள்பவரின் மனத்தையும் பொசுக்கிக் விடும் தன்மை வாய்ந்தது...

முரளியின் மனதில் தோன்றிய பொறாமையில் யதுநந்தனின் மேல் அவன் கொண்டிருந்த நட்பு பொசுங்கிக் காணாமல் போய்விட்டது.

சுபாவின் திருமணத்திற்கு யதுநந்தன் வந்திருந்தான்... ராதா, திருமண மண்டபத்தில் ஓடி... ஆடி... வேலை செய்யும் சாக்கில் அவனைக் கண்குளிர பார்த்துக்கொண்டிருந்தாள்... முகூர்த்த நேரத்தில் சுபாவின் கழுத்தில் தாலி ஏறியபோது 'தன் கழுத்தில் என்று யதுநந்தன் தாலி கட்டுவான்...' என்று அவளுக்குள் ஏக்கம் தோன்றியது...

அதே நினைவுடன் அவன் யதுநந்தனைப் பார்க்க... அப்போது அவனும்...அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்... இருவரின் விழிகளும் சந்தித்துக்கொண்டன. ராதாவின் ஏக்கம் யதுநந்தனைத் தாக்கியது...

'சீக்கிரமாய்... யாமினிக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டும்...' என்று நினைத்துக்கொண்டான்...

மாலையில்... அதே மண்டபத்தின் தோட்டத்தில் திருமண வரவேற்பு நடந்தது.

மெல்லிசைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது... மேடையில் ராதாவின் வயதையொட்டிய உறவுக்காரப் பெண்கள் பாட, ராதாவையும் பாடச் சொல்லி... விழிகளால் சமிக்ஞை செய்தான் யதுநந்தன்.

அன்று முழுவதும் அவனது அருகாமை கிடைத்து விட்ட சந்தோஷத்தில் ராதாவின் மனம் பொங்கித் ததும்பியது... அவள் மேடையேறி பாட ஆரம்பித்து விட்டாள்.

*"நான் உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்...*
*நீ வரவேண்டும்...*
*உன் நினைவில் மயங்கி ஆடுகிறேன்...*
*நீ வர வேண்டும்...*
*கடந்த வருடம் நடந்ததெல்லாம்...*
*மனதின் ஏட்டிலே...*
*கனிந்து வரும் புது வருடம்...*
*புதிய பாட்டிலே..."*

ராதாவிற்கு சங்கீத ஞானம் கிடையாது. ஆனால் சங்கீதத்தை ரசிக்கும் கேள்வி ஞானம் உண்டு... மெல்லிய குரலில் அவள் பாடிக் கொண்டிருக்க... அது தனக்கான பிரத்யேக பாட்டு என்பதால்... யதுநந்தன் கால்மேல் கால் போட்டுக்கொண்டு நாற்காலயில் சாய்ந்தமர்ந்து ரசிக்க ஆரம்பித்தான்.

*"மாதா கோயில் மணியோசை...*
*நம்மை வாழ்த்தும் அருளோசை*

*தேவா... நீயும் வா...*
*உருகும் மெழுகில் ஒளியுண்டு...*
*ஒளியின் நிழலில் உறவுண்டு...*
*உயிரே... தேடி வா...*
*வருங்காலம் பொன்னாக...*
*வாழ்நாளில் ஒன்றாக...*
*எதிர்பார்த்த நேரத்தில்...*
*எனைத் தேடி வாராயோ...*
*நெஞ்சே என்னிடம்...*
*நினைவோ உன்னிடம்...''*

ராதாவின் குரலில் ஒருவித சோகம் இழையோடுவதை யதுநந்தன் கவனிக்கத்தான் செய்தான்... தன் மேலிருக்கும் அளவு கடந்த காதலால்... அவள் மனத்துயரம் கொள்வதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ராதா... அவன்மேல் பார்வையைப் பதித்து - தொடர்ந்து பாடினாள்...

*"இதயம் எனது காணிக்கை...*
*இணைவோம் என்ற நம்பிக்கை...*
*அழைத்தேன்... ஓடிவா...*
*ஓடும் காலம் ஓடட்டும்...*
*இளமை நின்று வாழட்டும்...*
*அழகே... தேடிவா...*
*உனக்காக பெண்ணுண்டு...*
*உறங்காத கண்ணுண்டு...*
*தனக்காக வாழாமல்...*
*தவிர்க்கின்ற நெஞ்சுண்டு...''*

அவளைப் பிரிந்து செல்லும் வேளை வந்தபோது... வழக்கம் போல்... ராதா கண் கலங்கினாள்...

வழக்கத்திற்கு மாறாக... யதுநந்தன்... அன்று அவளிடம் இணக்கமாக பேசினான்.

''கொஞ்ச நாள்தான்... பொறுத்துக் கொள்... எல்லாம் சரியாகிவிடும்...''

''எனக்கு கல்யாணத்தின் மூலம் வரும் உறவின் மீது ஆர்வம் இல்லை நந்து... என் ஆர்வமெல்லாம் உங்கள் மீதுதான்.... நம் கல்யாணம் முடிந்தால்... நான் உங்களின் அருகேயே இருப்பேன்... உங்கள் முகத்தைக் கண்ணாரப் பார்த்து ரசிப்பேன். உங்கள் பேச்சைக் காதுகுளிர கேட்டுக் கொண்டிருப்பேன்... இருபத்தி நான்கு மணி நேரமும்... நீங்கள் என் சொந்தமாக என் அருகில் இருப்பீர்கள்...''

ராதாவிற்கு... ஏனோ... அன்று அழுகை பொங்கி வந்தது...

## 12

பெங்களூரின் இதமான சீதோஷ்ணநிலை உடலை குளிர்வித்தது... 'ஆல்பா ரிசர்ச் சென்டர்...'' என்ற நியான் எழுத்துக்கள் பெரிதாக பொறிக்கப்பட்டிருந்த அந்த விஞ்ஞான கூடத்தின் வாசலை மிதித்த ராதா... மானசீகமாய் கடவுளை வணங்கிக்கொண்டு உள்ளே கால் எடுத்து வைத்தாள்.

''வாட் ஆர் யு வாண்ட்?'' ரிசப்ஷனில் அமர்ந்திருந்த அழகுப் பெண் வினவினாள்.

''ஐ ஆம் ராதா... கமிங் ஃப்ரம் சென்னை... இங்கே பயோடெக்னாலஜி செக்சனில் எனக்கு வேலை கிடைத்திருக்கிறது...'' ராதா தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

''யுவர் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் ப்ளீஸ்...''

ராதா கொடுத்த வேலை நியமன உத்தரவை வாங்கிப் பார்த்த அந்தப் பெண் தொலைபேசியில் பேசிவிட்டு ராதாவைப் பார்த்து சிரித்தாள்.

“வெல்கம் மிஸ் ராதா...”

“தேங்க் யு...”

“ஐ ஆம் சுனிதா... கமிங் ஃப்ரம் கன்னியாகுமரி...”

“ஓ...”

சுனிதா நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு... ராதா... உள்ளே போக முனைந்தாள்...

“வெயிட் எ மினிட்... நானும் உங்ககூட வருகிறேன்...”

“இட்ஸ் ஆல்ரைட்... நானே போய்க் கொள்வேன்...”

“உங்களால் அது முடியாது ராதா... இந்த ரிசர்ச் சென்டரின் பிரம்மாண்டத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாது... உங்கள் செக்சனைக் கண்டு பிடித்துப் போக சிரமப்பட்டுவிடுவீங்க... என்னுடன் வாங்க...”

“இன்றைக்கு ஒருநாள் நீங்க வழி சொல்லி விடுவீங்க. நாளைக்கு?”

“நாளைக்கு சங்கதியை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். முதலில் இன்றைக்கு நடக்க வேண்டிய வேலையைப் பாருங்க...”

“இவள் யதுநந்தனைப் போலவே பேசுகிறாளே...” ராதாவின் மனம் வலித்தது.

யார் முகத்தைப் பார்ப்பதற்காக... இருட்டிய பின்னாலும் வீட்டிற்குப் போகாமல் காத்திருந்தாலோ... யார் குரலைக் கேட்பதற்காக... படிப்பைக்கூட மறந்து பித்துபிடித்தவள் போல் பரபரத்தாளோ... யாரின் அருகாமைக்காக அல்லும் பகலும் உருகி நின்றாளோ... அந்த யதுநந்தனைப் பிரிந்து... சென்னையைவிட்டு பெங்களூருக்கு வருவாள் என்று கனவிலும் ராதா நினைத்துக் கூடப் பார்த்ததில்லை...

நினைத்ததெல்லாம் நடந்து விட்டால்... தெய்வத்தை நாம் நினைக்க மறந்து விடுவோமே... அது தெய்வத்திற்கு பொறுக்குமா... என்ன?

'நீ நினைத்தது கை கூடிவிட்ட கனவில் மிதக்கிறாயோ? கை கூடிவிட்ட கனவு... காலத்திற்கும் நிலைத்து நிற்குமா?' என்று தெய்வம் நினைத்து விட்டது போல...

ராதாவின் கனவுக் கோட்டை ஒருநாள் கலகலத்துப் போனது... அவளும்... யதுநந்தனும் அன்யோன்யமாக அவர்களே சிருஷ்டித்த ஒரு மாய உலகில்... மானசீக கணவன். மனைவியாக வாழ்ந்து வந்தார்கள்... அந்த மானசீக உறவு ஒருநாள் ஆடிப் போனது...

தினமும் யதுநந்தனைக் கடற்கரையில் சந்திக்கும் வழக்கமுள்ள ராதா... படிப்பு முடிந்ததும்... சந்திக்கும் இடத்தை... பக்கத்திலிருந்த பூங்காவிற்கு மாற்றிக்கொண்டாள்...

"அம்மா... 'ஈவினிங் வாக்' போயிட்டு வரேன்..."

அந்தப் பூங்காவில்... மாலை நேரத்தில்... சுற்றிப் போடப்பட்டிருக்கும் நடைபாதையில்... நிறைய பேர் நடப்பது வழக்கமான ஒன்று என்பதால்... ராதாவின் இந்தக் கோரிக்கையை மந்தாகினி மறுக்கவில்லை...

அப்படி யதுநந்தனுக்காக காத்திருந்த ஒருநாளில், தற்செயலாக வருவதுபோல... முரளி எதிரே வந்து நின்றான்...

"ஹலோ சார்... என்ன இந்தப் பக்கம்?" ராதா இயல்பாக வினவினாள்.

"அடுத்த தெருவில் எங்க உறவுக்காரங்க வீட்டிற்கு வந்தேன்... நீங்க இங்கே உட்கார்ந்திருக்கவும்... பேசி விட்டுப் போகலாமுன்னு நினைத்து வந்தேன்..." முரளி அவளருகே அமர்ந்தான்...

"யதுநந்தன் வரும் வேளையில்... என்னோடு இவனுக்கென்ன பேச்சு..." ராதா மனம் கடுகடுக்க... நகர்ந்து அமர்ந்தாள்...

அதைக் கண்டும் காணாதவன் போல் முரளி பேச்சைத் தொடர்ந்தான்.

"யதுநந்தனைப் பார்த்தீங்களா?"

"அதுதான் தினமும் பார்க்கிறேனே..." என்ற நினைவுடன் ராதா அவனை ஏறிட்டுப் பார்த்தாள்...

"ஏனு கேட்கறீங்க...?"

"இல்லை... சும்மாதான் கேட்டேன்?"

"நீங்க சும்மா கேட்டது போல இல்லையே..."

"எனக்கெதுக்குங்க அடுத்தவங்க வம்பு..."

'இவன் ஏன் சம்பந்தமில்லாமல் உளறுகிறான்...' என்று பல்லைக் கடித்தாள் ராதா.

"சரியாச் சொன்னீங்க... எனக்கும் வம்பு பேசப் பிடிக்காது..."

"இடத்தைக் காலி பண்ணனும்னு மறைமுகமாய் சொல்கிறாள்..." முரளி எரிச்சல்பட்டான்... ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு...

"யாருக்குத்தான் வம்பு பேசப் பிடிக்கும்? ஆனாலும் கண்ணுக்கு முன்னால் சில விஷயங்கள் நடக்கும் போது... நமக்கென்னான்னு போக என்னால் முடியவில்லைங்க... என் மனது கேட்கவில்லை... ஏன்னா... எனக்கு இளகின மனது..." என்று கூறினான் முரளி...

"அதுவும் பெண்களென்றால் ரொம்பவும் இளகி விடுவீங்களாமே..." ராதா வாய் பொத்தி சிரித்தாள்...

அவளிடம்... தனது காதல் ராசியைப் பற்றி யதுநந்தன் பிட்டுப் பிட்டு வைத்திருக்கிறான் என்பதை யூகித்துக்

கொண்டான் முரளி... அவன் மனதில் யதுநந்தனின் மேலிருந்த புகைச்சல் இன்னும் வீரியம் கொண்டது.

“என்னவோ போங்க... உங்களைப் பார்த்தால் எனக்கு... என் தங்கை நினைவு வருகிறது...” முரளி பாசமலர் வளர்த்தான்...

“உங்க தங்கை என்ன பண்ணிக்கிட்டு இருக்காங்க...” ராதா சாதாரணமாக கேட்டாள்...

“எனக்குத் தங்கையே இல்லைங்க...நான் என் அப்பா அம்மாவிற்கு ஒரே மகன். சென்னையில் சொந்தமா பிளாட் இருக்கு... கார் இருக்கு...” என்று தன் பெருமைகளை முரளி அடுக்க...

‘உன்னை... இதையெல்லாம் என்னிடம் ஒப்பிக்கச் சொல்லி... நான் கேட்டேனா’ என்ற பார்வை ஒன்றை பார்த்து வைத்தாள் ராதா...

‘உனக்குத்தான்... யதுநந்தன் பித்துப் பிடித்திருக்கிறதே...!’ முரளி பொறாமைப்பட்டான்.

“அப்புறம் ஏன்... என்னைப் பார்த்தால் உங்களுக்கு தங்கையின் நினைவு வருகிறதுன்னு சொன்னீங்க?”

“உங்களைப் பார்த்தால் எனக்கு... என் தங்கையைப் போல பாசம் வருதுன்னு சொன்னேம்மா...”

“ஓஹோ...”

ராதா நம்பாத பார்வையுடன் இன்னும் தள்ளி உட்கார்ந்து கொண்டாள்.

‘இந்த நந்து சீக்கிரம் வந்து சேர்ந்தால் தேவலை... இவன் போடும் பிளேடைத் தாங்க முடியவில்லை...’ என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது...

“யதுநந்தன்... உங்களுடன் பழக ஆரம்பித்த புதிதில் என்ன சொன்னான் தெரியுமா?” என்று கேட்டான் முரளி...

"என்ன சொன்னார்?"

" 'அந்தப் பெண்ணின் மீது எனக்கொரு ஈர்ப்பு வந்திருக்குடா'னு சொன்னான்..."

ராதாவின் முகம் மாறியது...

"நான் உடனே... 'என்னடா... உனக்குக்கூட காதல் வந்திருக்கிறதா'ன்னு கேட்டேன்..."

"ஏன் அப்படிக் கேட்டிங்க?"

"அவனுக்கு கல்யாணமெல்லாம் பிடிக்காதும்மா 'தாலியைக் கட்டிவிட்டு... வாழ்நாள் பூராவும் யார் அவஸ்தைப் படுவது'ன்னு கேட்பான்..."

ராதா முகம் வெளிறிப் போனாள்...

"அவனைப் பொறுத்தவரை... கல்யாணம் பண்ணிக் கொள்கிறவங்க எல்லாம் ஆயுள் தண்டனைக் கைதிகள்..."

ராதாவின் முகத்தில் பயம் வந்தது.

"அதனால்தான் நான் அவனிடம் அப்படிக் கேட்டேன். 'இது காதலான்னு எனக்குத் தெரியலைடா'னு சொன்னான்..."

'அவன் பேசுவதைக் கேட்க கூடாது... எழுந்து சென்றுவிட வேண்டும்' என்று ராதாவிற்கு தோன்றியது... ஆனாலும் அவளின் உள்மனது... 'யது நந்தனின் அந்தரங்க மனதில் தனக்கு இடம் இல்லையோ...' என்று அலை பாய்ந்தது... அவள் முரளியின் முகம் பார்த்தாள்.

அவனது வார்த்தை... முரளி இனம் கண்டு கொண்டான். அவன் மனதில் களிப்புத் தோன்றியது.

'நான் விலகினாலும் அவள் என்னை விட்டு விலக மாட்டாள்...!'

யதுநந்தனின் நம்பிக்கையான வார்த்தைகள் அவன் மனதில் அம்புகளாய்ப் பாய்ந்தன. அந்த நம்பிக்கையைக் குலைக்கும் திட்டத்தை அவன் செயலாற்ற ஆரம்பித்தான்.

## 13

"சொல்லுங்க அண்ணா... அப்புறம்... என்னைப்பற்றி அவர் வேறு என்ன சொன்னார்?"

'அவளால் காதலிக்கப்படுவது எனக்குப் பிடித்திருந்தது... ஆனால் போகப் போக... நானும் அவளைக் காதலிக்க ஆரம்பித்துவிட்டேன்...' யதுநந்தனின் வார்த்தைகள் முரளியின் மனதில் தோன்றின.

"அவளால் காதலிக்கப் படுவது எனக்குப் பிடித்திருக்கிறதுன்னு சொன்னான்ம்மா..."

அழகாக - யதுநந்தன் சொன்ன அடுத்த வார்த்தையை மறைத்துவிட்டு பேசினான் முரளி...

'பெருமாளே...!' ராதாவின் மனம் பரிதவித்தது.

'எனக்கு வழிகாட்டு... அன்றைக்கு கீதை சொல்லி பார்த்தனுக்கு வழிகாட்டிய பார்த்தசாரதியே... எனக்கும் வழிகாட்டு... என் மனமெல்லாம் அவன் நிறைந்திருக்கிறான்... அவன் எனக்கு இல்லையென்றாகி விட்டால் நான் என்ன ஆவேனென்று எனக்கே தெரியவில்லை... என் வாழ்நாளின் வாழ்க்கையை நான் வாழ எனக்கு அவன் வேண்டும்... அவனுடைய காதல் வேண்டும்...!'

இதை நினைக்கும் போதே...

'அவன் என்னைக் காதலிக்கவில்லையே... நான்தானே அவனைக் காதலிக்கிறேன்...' என்ற ஏக்கம் ராதாவின் மனதில் பொங்கி எழுந்தது.

அவள் படித்தவள்... பெற்றவர்களுக்கு செல்லப் பெண்... மிக அதிகமான சம்பளத்துடன் பெங்களூரில் அவளுக்கு வேலை கிடைத்திருக்கிறது. ஆனால்... அவளின்

இத்தனை அடையாளங்களையும் மறந்து... யதுநந்தனின் காதலுக்காக மட்டுமே ராதா ஏங்கினாள்... அவன் காலடியில் ஒரு யாசகியாக மண்டியிடுவதைப் பற்றி அவள் கொஞ்சம்கூட யோசிக்கவில்லை... தயங்கவில்லை... கவலைப்படவில்லை..'

அவள் கவலைப்பட்டதெல்லாம்... யதுநந்தனின் காதலைதான் இழந்து விடக்கூடாது என்பதற்காக மட்டும்தான்...

"அவர் ஏதோ நினைவில் அப்படிச் சொல்லியிருப்பார்..."

"அவன் அவ்வளவு தீவிரமாய் யாரையும் நினைக்க மாட்டான்ம்மா... எனக்கு அவன் குணம் தெரியும்."

"எனக்கும் தெரியும்...'"

"என்ன தெரியும்... இப்போது யாமினிக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு இருக்காங்க... மாப்பிள்ளைக்கு ஒரே தங்கை... அதுவும் கம்ப்யூட்டர் என்ஜினீயர்தான்... பெண் கொடுத்து... பெண் எடுக்கலாமுன்னு பேச்சு அடிபடுது... இது உங்களுக்குத் தெரியுமா?"

"அதற்கெல்லாம் அவர் ஒப்புக் கொள்ளமாட்டார்..."

"யாமினிக்கு மாப்பிள்ளையை பிடித்துவிட்டது... தங்கைக்காக அவன் எதையும் செய்வான்..."

'செய்து விடுவானோ...!' ராதா இதயம் நடுகினாள்... அன்று ஒருநாளில்... அவள் காத்திருக்கும்போது... அவளுக்கு தகவல் சொல்ல நேரமில்லையென்று சொல்லிவிடு... தங்கையைக் கொண்டுபோய் கல்லூரியில்விட்டு வந்தேன் என்று சொன்னவன் தானே அவன்... அவன் செய்தாலும் செய்வான்... அவன்தான் ராதாவைக் காதலிக்கவில்லையே...

ராதா மனம் தளர்ந்தாள்... யதுநந்தனின் மேல் அவள் கொண்டிருந்த அளவு கடந்த காதலே... அவளுடைய நிம்மதியை பறித்து... உயிரைக் குடிக்க ஆரம்பித்தது.

''அப்போ... நான் கிளம்புகிறேன்ம்மா... பார்த்து இருந்துக்கங்க... என்னவோ... என் மனதில் பட்டதைச் சொல்லிவிட்டேன்... ஒருவர் மேல் அளவுக்கு அதிகமான அன்பை வைக்கக்கூடாதும்மா... ஒருவேளை பிரிவு வந்துவிட்டால்... அதைத் தாங்கிக்கொள்ளும் பக்குவமும் உங்களுக்கு வேண்டும்...''

'நீ நாசமாய் போக...' என்று முறைத்தாள் ராதா.

'கூடப் பிறந்தவள் போல் என்று சொல்லிக் கொண்டே என் உயிரைக் குடிக்கும் வார்த்தையைச் சொல்லுகிறாயேடா பாவி... பிரிவு வந்தால் நான் செத்து விடுவேன்டா...'

அவள் மனதிற்குள் தன்னை அவமரியாதையாய் விளிப்பதை அறியாமல் முரளி நடையைக் கட்டினான்...

ராதா வெகுநேரம் அசையாமல் கலங்கிப் போய் உட்கார்ந்திருந்தாள்... வெகுநேரம் கழித்து வந்த யதுநந்தன்... தன் வழக்கப்படி மணி பார்த்தபடி அவளருகே அமர்ந்து,

''ம்ம்... அப்புறம்... சீக்கிரம் சொல்ல... எனக்கு நேரமாகி விட்டது...'' என்றான்.

ராதா வேதனையுடன் கண்களை மூடித் திறந்தாள்...

''நீங்கள் இப்போதுதான் வந்தீங்க நந்து...''

''அதற்காக இங்கேயே குடியிருக்கச் சொல்கிறாயா?''

''குடியிருந்தால் தப்பில்லை... எனக்கு உங்களிடம் பேசவேண்டும்...''

''பேசு...''

அவன் என்னவோ எளிதாக சொல்லிவிட்டான்... பேச நினைத்த வார்த்தைகள் மறந்து போய்... 'எதைப் பேசுவது... எப்படிப் பேசுவது' என்று தெரியாமல் ராதாதான் தவித்தாள்...

"பேசேண்டி..."

அந்த ஒரு சொல்லில் உயிர் பெற்று முகம் பிரகாசிக்க அவனைப் பார்த்தாள் ராதா...

"நந்து..."

"ம்ம்... சொல்லு..."

"ஐ லவ் யு..."

அவன் தன் வழக்கப்படி முல்லைப் பற்கள் வரிசை கட்டித் தெரிய பளீரென்று சிரித்தான்.

"இதைச் சொல்லவா... இவ்வளவு திணறினாய்? இன்னும் நீ மாறவே இல்லை ராதா... நான் முதன் முதலாய் உன்னைப் பார்த்தபோது எப்படித் திணறினாயோ... அப்படியேதான் இன்றைக்கும் இருக்கிறாய்..."

'அது உனக்குப் பிடித்திருந்ததா?' ராதா மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்...

'அவளைப் பார்த்தால் எனக்கு ஒரு ஈர்ப்பு வருகிறதுன்னு சொன்னாயாமே... இது வெறும் ஈர்ப்பு மட்டும்தானா?'

"யாமினிக்கு மாப்பிள்ளை பார்க்கிறீங்களாமே..."

"யார் சொன்னது?"

"முரளி..."

"ஓ... அவன் சொன்னானா?"

நண்பனின் மேலிருந்த நம்பிக்கை மாறாமல் இயல்பாக யதுநந்தன் பேசினான்.

"யாமினிக்கு மாப்பிள்ளையை பிடித்து விட்டதாமே?"

"ஆமாம்..."

"மாப்பிள்ளைக்கு ஒரு தங்கை இருக்கிறாளாமே?"

"இருக்கிறாள்..."

"அவளும் உங்களைப் போல ஒரு கம்ப்யூட்டர் என்ஜினீயர் தானாமே?"

ராதாவின் கேள்விகள் போகும் திசையை யதுநந்தன் கண்டு பிடித்து விட்டான். அவனது புருவங்கள் உயர்ந்தன...

"இப்போது... நீ என்னதான் சொல்ல வருகிறாய்?"

"அவங்க வீட்டில் பெண் கொடுத்து... பெண் எடுக்க விருப்பப் படறாங்களாமே."

"ராதா... இது எனக்கு சரிவராது. முரளிக்கு எதையும் மறைத்து பேசும் பழக்கம் கிடையாது..."

"ஓ... அப்போ... நீங்க என்னிடமிருந்து எதை வேண்டுமானாலும் மறைப்பீங்க?"

"உன் பேச்சில் அதட்டல் தென்படுகிறது ராதா... வேண்டாம்... எனக்கு இது பிடிக்காது..."

ராதா மனம் அதிர்ந்தாள்... அவளுடைய. அவன் மீதான கோபத்தை... அவள் யாரிடம் காட்டுவாள்? அவன் மீதுதானே அதைக் காட்ட முடியும்! அவள் யாரோ ஒரு மூன்றாம் மனிதனா? அவளுக்கு உயிர் மூச்சாய் இருப்பவள்தானே...

பேச நினைக்கும் வார்த்தைகளைப் பேச முடியாமல் போவது பெரும் துயரம்... அந்தத் துயரத்தை யதுநந்தன் தினம்தினம் ராதாவிற்கு அளித்து வந்தான்... அதை உணராதவனாய் அவளையே குற்றவாளியாகவும் ஆக்கிவிட்டான்.

"நீங்கள் உங்களைப் பற்றி மட்டும்தான் எப்போதுமே நினைப்பீங்களா நந்து? என்னைப் பற்றிக் கொஞ்சம்கூட யோசிச்சுப் பார்க்க மாட்டீங்களா?"

"என்னத்தை யோசிக்கச் சொல்கிற?"

"அதை நான் சொல்லி நீங்கள் செய்வது பெரும் கொடுமை..."

"இப்படிப் பூங்காவில் நான்கு பேர் பார்க்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு உன்னிடம் வழக்காடுவது - அதைவிட பெரும் கொடுமை..."

‘‘எனக்குப் பதில் சொல்ல வேண்டியது உங்களுக்குக் கடமையில்லையா?’’

‘‘அதை நான் சொல்ல வேண்டும்... நீ சொல்லக் கூடாது...’’

‘‘நந்து... நான் ‘மிஸஸ் யதுநந்தன்’ என்ற உணர் வோடும்... நினைவோடும் வாழ்பவள்...’’

‘‘அதுவும் உன் பிரச்னை. என் பிரச்னையில்லை ராதா...’’

‘‘நந்து...’’

‘‘என்னைக் கட்டுப்படுத்த நினைக்காதே... நான் சுதந்திரமாய் வாழ்ந்து பழக்கபட்டவன்... கேள்வி கேட்டால் எனக்குப் பிடிக்காது...’’

‘பூவேலி போடாதே என்கிறான்... தான் வேலிபோட நினைக்கவில்லை... அவனைக் கட்டப்படுத்தவும் முனையவில்லை என்பதை எப்படி அவனுக்கு புரிய வைப்பது என்று தெரியாமல் ராதா மனம் கலங்கினாள்.

‘நீ நீயாய் இரு... உன் சுதந்திரத்தை நான் தடை செய்ய மாட்டேன். நான் கேட்பதெல்லாம் என்ன? உன் இதயத்தில் எனக்கென்று சிறு துளி இடம்... அது எனக்கு இருக்கிறதா என்பதை அறியத்தானே நான் ஆசைப்பட்டேன்? வேற என்ன கேட்டேன்?’

யதுநந்தனோ... கோபத்தில் கொதி கலனாக இருந்தான். ‘இவள் யார் என்னைக் கேள்வி கேட்க?’ என்பது மட்டுமே அவனுக்கு நினைவாக இருந்தது...

அவன் ராதாவைக் காதலித்தான்தான்... அதற்காக அவளது கட்டுக்குள் அடங்க விரும்பவில்லை... ராதாவின் காதல் தன்னைக் கட்டுப்படுத்துவதாய் அவன் உணர்ந்தான்...

முதல் முறையாக... அவர்கள் இருவருக்குள்ளும் ஒரு விரிசல் வந்தது...

## 14

ராதா பூஜையறையில் கண்மூடி நின்றிருந்தாள்... வீட்டில் யாருமில்லை... அவளது கண்ணீரைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை என்ற உணர்வில்... தடையில்லாமல் அவள் கண்களில் கண்ணீர் பெருக் கெடுத்துக் கொண்டிருந்தது?

'இந்தத் தடையில்லாத உணர்வைத்தான் யதுநந்தனும் விரும்புகிறான் என்று அவளுக்குத் தோன்றியது... அவனது விருப்பத்தில் இருந்த நியாயமும் அவளது பக்திக்கு உறைத்தது.

கண்முன் இருந்த கிருஷ்ணனின் படத்தை அவள் உற்று நோக்கினாள்....

'குருஷேத்திர போர்க்களம்' அவள் கண்முன் விரிந்தது... போர்புரிய முடியாதவனாய் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு... கண்மூடி... கைகுவித்து... மண்டியிட்டு... சரண் அடைந்திருக்கும் அர்ஜுனனுக்கு கீதை சொல்லி... பாதை காட்டிக் கொண்டிருக்கிறான் கிருஷ்ணன்...

'எதை நீ கொண்டு வந்தாய்...?' என்று கேட்கிறான்...

ராதா பரிதவித்தாள்... பார்த்தசாரதியிடம் தனக்கும் பாதைகாட்டச் சொல்லிக் கேட்டு விம்மி அழுதாள்...

'எதையும் நான் கொண்டு வரவில்லையே மனதை மட்டும் நீ ஏன் கொடுத்தாய்?

எல்லாமும் மாயை என்று சொல்லும் நீ... ஆண்டாளை மட்டும் அடைக்கலமாய்,

ஏன் சேர்த்துக் கொண்டாய்...'

அவளது கேள்விக்கு பார்த்தசாரதியிடம் பதில் கிடைக்குமா? என்று... கடவுளின் பாதம் பார்த்தாள் ராதா...

'கடமைகளைப் புரிந்து கவலை விடு... என்று சொன்னாயே... கடமைகளைப் புரிய எனக்கு வாழ்வதற்கான ஆசை வேண்டாமா? நான் வாழ ஆசைப்படுவதே... யதுநந்தன் அடைய வேண்டும் என்பதற்காகத்தானே..."

கிருஷ்ணன் ராதாவைப் புன்னகையுடன் பார்த்தான்... 'ஏன் என்னைப் பார்க்கிறாய்? எனக்கும் கீதை சொல்' என்று வேண்டிக் கொண்டிருந்த ராதாவின் மனதினில் கீதையின் சாராம்ச் பாடல் ஒலித்தது...

*'சுகத்தில் விருப்பும்... துன்பத்தில் துயரும் இன்றி...*
*அனைத்திலுமே... அபிமானங்கள் இல்லாத... ஆன்றோன்*
*ஞானம் பெறுவானே...'*

பளீரென்று ராதாவின் மூளையில் மின்னல் அடித்தது... இதுதானா? இதேதானா? அவளது துயரத்திற்கான மூலகாரணம் யதுநந்தனின் மேலிருக்கும் அவளது கரை கடந்த விருப்பம்... அதைத் துறக்கச் சொல்கிறதா கீதை?

முடியுமா? கீதையின் பாதையில் நடக்க... இந்த ராதையால் முடியுமா? யதுநந்தனின் மேலிருக்கும் ஆசையைத் துறந்து... அவனை மறந்து... விலகிச் செல்வது அவளால் சாத்தியப்படுமா?

ராதா பூஜையறையை விட்டு வெளியேறினாள்... 'நீ வழி கேட்டாய்... நான் வழி சொல்லி விட்டேன்...' என்ற பாவனையில் பூஜையறையில் பகவான் சிரித்துக் கொண்டிருந்தான்...

'நீ கொடுமை செய்கிறாய் கிருஷ்ணா...' ராதா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்...

'உன்னைச் சரணடைந்தேனே... நீ எனக்குச் சொல்லும் கீதை இதுதானா? நீ அன்று உன்னைக் காதலித்த அந்த ராதைக்கும் அநீதியை இழைத்தாய்... இன்று... எனக்கும் அதே அநீதியைத்தான் இழைக்கிறாய்.. காதலிக்க ராதையையும்... திருமணத்திற்கு ருக்மணியையும்... கொண்டவன்தானே நீ? எனக்கு இந்தப் பாதையைத்தான் காட்டுவாய்...''

ராதாவிற்கு துக்கமாக வந்தது... ஏன்தான் இந்தப் பெயரைத் தனக்கு வைத்தார்களோ என்று நினைத்துக் கொண்டாள் ராதை. காதலின் அடையாளம்... கல்யாணத்தின் அடையாளமல்ல... அவள் நினைத்த வாழ்க்கையை வாழ முடியாத துரதிர்ஷ்டசாலி...

'உனக்குக் கருணையில்லை கடவுளே... என்னைப் படைத்து... என்னுடன் மனநிலையும் படைத்து... மனதினில் ஒரு காதலையும் படைத்து... அது கிடைக்காமல் தட்டியும் பறிக்க நினைக்கிறாயே... என்னைப் பார்த்தால் உனக்குப் பாவமாக இல்லையா?''

யதுநந்தனிடம் கேட்க முடியாத இந்தக் கேள்வியை கடவுளிடம் கேட்டாள் ராதா.

அவன்தான் ஒரே வார்த்தையில் அவளுடைய இதயத்தைப் பிளந்து விட்டானே?

''ஜாலி கணபதின்னு ஒரு படம் வந்திருக்கு தெரியுமா? நீ அச்சு அசல் ஜாலி கணபதிதான் ராதா... என்ன மாதிரியான ஆளுமை குணத்தை என் மேல் திணிக்கப் பார்க்கிறாய்?''

'இதைச் சொல்வதற்கு பதில் நீ கத்தியை எடுத்து என்னைக் குத்திக் கொன்றிருக்கலாம்' என்று ராதா மறுகினாள்...

''நந்து... அந்த ஜாலி கணபதி கேரக்டர் ஒருவகையான சைக்கோ...''

''நீயா... அதைப்போல் மாறிக்கொண்டு வருகிறாய்... இது ஏன் உனக்குப் புரியவில்லை?''

யதுநந்தனின் கேள்வி புரிந்ததோ இல்லையோ... ஒன்று மட்டும் தெளிவாக ராதாவிற்குப் புரிந்தது... யதுநந்தனின் அவளுடைய அளவுகடந்த அன்பினால் மூச்சுத் திணறுகிறான். அவன் 'ஜூலி கணபதி...'' என்று இரக்கமில்லாமல் அவளைப் பார்த்துச் சொல்லி விட்டதற்கு அதுதான் காரணம்...

ராதா பதில் சொல்லாமல் எழுந்து கொண்டாள்... அதற்காகவே காத்திருந்தது போல் யதுநந்தனும் சென்று விட்டான்...

எப்போதுமில்லாமல் இப்போது அதிகமாக மனம் வலிப்பதை உணர்ந்தாள் ராதா...

அவள் அவனுடன் சில விசயங்களைப் பேசி முடிவு பண்ண விரும்பினாள்... கேட்க வேண்டியவனோ... அதைத் தட்டிக் கழித்தான்...

இரவு முழுவதும் தூங்காமல் விழித்த ராதா... விடியலின் போது ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்... ஒரு நீண்ட கடிதத்தை யதுநந்தனுக்கு எழுதினாள்.

'அன்பான நந்து...

நான் உங்களைக் காதலிக்கிறேன்... என் உயிருக்கும் மேலாகக் காதலிக்கிறேன் என்று சொன்னால் அது மிகையில்லை... உங்களுடன் இறுதிவரை வாழ ஆசைப் பட்டேன்... ஆனால்... என் ஆசைகள் கடவுளின் காதுகளில் விழவில்லை போல... சிலருக்கு இதுதான் கிடைக்கும் - இது கிடைக்காது என்பது... இறைவன் விதித்திருக்கும் நியதிபோல... நான் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அந்தத் தெய்வமும்... நீங்களும் ஆசைப்படும்போது நான் என்ன செய்ய முடியும்?

ஏழைகளின் ஆசையும்... கோவில் மணியோசையும்... என்றுமே வேறுபட்டுத்தான் நிற்கின்றன.

'உங்களை உங்களுக்காகவே நான் காதலித்தேன்... உங்களது உற்சாகத்திற்காக... உங்களின் சுறுசுறுப்பிற்காக... உங்களின் அலட்சியமான பேச்சிற்காக... உங்களின் ஆளுமை குணத்திற்காக... உங்களின் ரௌத்திரத்திற்காக...' என்று உங்களின் இயல்புகளைக் காதலிக்கிறவள் நான்...

என் அன்பால்... இவை அனைத்தும் குலைகிறதாய் நீங்கள் சொல்லும்போது... என் அன்பை நான் விலக்கிக் கொள்வதுதான். என் காதலுக்கு நான் செய்யும் கடமையாக இருக்க முடியும்...

நீங்கள்... நீங்களாகவே இருங்கள் நந்து... நான் விலகிப் போகிறேன்...

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன்... என் மனதில் என்றுமே நீங்கள் இருப்பீர்கள்... உங்களை மறந்து ஒரு வாழ்க்கையை நான் வாழ மாட்டேன்... என் இறுதி மூச்சின் அந்த வினாடியிலும், உங்கள் நினைவு என் மனதில் உறைந்திருக்கும்.

இப்படிக்கு,
கீதை சொல்லிய பாதையில் போகும்
**ராதா**

கடிதத்தை ஒட்டி... பக்கத்திலிருந்த தபால் நிலையத்தில் ஸ்பீடு போஸ்டில் அனுப்பிவைத்தாள் ராதா. மறுநாள் பெங்களூர் கிளம்புவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள்...

''ஹாஸ்டல் ரூமெல்லாம் ரெடியாய் இருக்குமா?'' மந்தாகினி கவலைப்பட்டாள்...

''என் ஃப்ரெண்ட் அங்கேயிருந்து போன் பண்ணினாளேம்மா... நீங்கள்தானே பேசினீங்க... அப்புறமும் என்ன பயம்?'' ராதா, மனதின் வலியை மறைத்துக் கொண்டு சிரித்தாள்.

“அப்பாவுக்கு ஜுரம்மடி... அவர் உன்னுடன் வரமுடியாதே...”

“அதனால் என்ன... என்னுடன் ஸ்கூலில் இருந்து பிளஸ் டூ வரை ஒன்றாகப் படித்தவளம்மா அந்த காயத்ரி... அவள் என்ஜினீயரிங் படித்துவிட்டு பெங்களூரில் வேலை பார்க்கிறாள்... நான் எம்.எஸ்.ஸி படித்துவிட்டு அதே பெங்களூருக்கு வேலைக்குப் போகிறேன். அவளுடைய ஹாஸ்டலில்... அவள் ரூமிலேயே எனக்கு இடம் பிடித்து வைத்துவிட்டாள்... இதற்குப் போய் இவ்வளவு கவலைப் படுவானேன்...”

மந்தாகினி, ரயில் நிலையத்திற்கு வந்து மகளை ரயிலேற்றிவிட்டாள். நிறைய புத்திமதிகள் சொன்னாள். தினமும் போனில் பேசச் சொன்னாள். நன்றாகச் சாப்பிடச் சொன்னாள்... பார்த்துப் பழகச் சொன்னாள்.

இவை எதுவுமே ராதாவின் மனதினில் பதியவில்லை. அவள் மனம் ஆறாத துயரத்தில் இருந்தது. இந்தச் சென்னையை விட்டு... யதுநந்தனின் நிழலை விட்டு, அவனது நினைவுகளை மட்டுமே சுமந்துகொண்டு அவள் போகிறாள்...

இனி அவன் முகம் பார்க்க முடியாது. அவன் குரல் கேட்க இனி வழியிருக்காது... ‘உன் பாதையில் இனி நான் வரமாட்டேன்’னென்று உறுதி கொடுத்துவிட்டு விலகிச் செல்கிறாள்...

அவளது உயிருக்குயிரான காதலின் மேலிருந்த அளவு கடந்த காதலை மட்டும் மனதில் சுமந்துகொண்டு... அவனுடன் கழித்த பொழுதுகளைப் பொக்கிஷமாய் மனதில் பூட்டி வைத்துக்கொண்டு... உயிரற்ற உடலைச் சுமந்து கொண்டு... பெங்களூரில் கால் வைத்தாள் ராதா.

**கா**யத்ரி ரயிலடிக்கு அவளை வரவேற்க வந்திருந்தாள்... பெட்டிகளுடன் இறங்கியவளுக்கு கை கொடுத்து அவள் இறங்க உதவினாள்...

"ரூம் ரெடியாய் இருக்குதானே காயதிரி?"

"என் ரூம்தாண்டி... உனக்கும் இனி ரூம்.'"

"அம்மா பயந்தாங்க..."

"யாமிருக்க பயமேன்னு உன்னிடம் சொல்லியிருந்தேனே... அதை அம்மாவிடமும் சொல்லியிருக்க வேண்டியதுதானே..."

"பெரியவங்க கிட்ட என்ன சொல்வதுடி..."

ஹாஸ்டலில் வார்டனிடம் கொடுக்க வேண்டியும் செர்டிபிகேட்களைக் கொடுத்துவிட்டு... போட வேண்டிய கையெழுத்துக்களைப் போட்டு விட்டு காயத்ரியைப் பின்தொடர்ந்தாள் ராதா...

"ஏன்டி டல்லாயிருக்க...?" காயத்ரி விசாரித்தாள்.

"ஒன்றுமில்லை... அம்மா அப்பா நினைவு..." ராதா மனதை மறைத்துப் பதில் சொன்னாள்...

"யதுநந்தன் எப்படியிருக்கிறார்...?"

"........."

"என்னடி மௌனமாகி விட்ட? உன் வீட்டில் யதுநந்தனைப் பற்றிச் சொல்லி விட்டாயா?"

"சொல்லவில்லை..."

"ஏன்..."

"அவரே இன்னும் ஒரு முடிவுக்கு வராதபோது... நான் என் வீட்டில் எந்த நம்பிக்கையில் இந்தப் பேச்சை எடுப்பது காயத்ரி..."

“அதற்காக? சொல்லாமலே எத்தனை நாள் இதை மறைத்து வைப்பாய் ராதா?”

“யதுநந்தனின் அனுமதியில்லாமல் இதை நான் என் வீட்டில் சொல்லமாட்டேன் காயத்ரி...”

ராதா உறுதியுடன் சொல்லிவிட்டு உடைகளை எடுத்துக்கொண்டு... குளியலறைக்குள் புகுந்தாள்...

மலரும் நினைவுகளை காயத்ரி பேசிக் கொண்டிருக்க... ‘மனமில்லாமல் ‘ஊம்’ போட்டுக் கேட்டுக்கொண்டிருந்தவள்... உறங்குவது போல் கண்களை மூடிக்கொண்டாள்...

“தூங்கி விட்டாயா? தூங்கு... தூங்கு...”

‘தூக்கத்தை தோழி மறந்து வெகு காலமாகி விட்டது’ என்பதை உணராமல் காயத்ரி கூறிவிட்டு படுத்துவிட்டாள்...

இரவின் இருளினில்... ராதாவின் இமைகள் விரிந்து கொண்டன... ‘இந்நேரம் யதுநந்தன் என்னுடைய கடிதத்தைப் படித்திருப்பான்’ என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

‘என்ன முடிவெடுத்திருப்பான்? இனி இவள் தொல்லை இல்லையென்று நிம்மதியாக இருந்து விடுவானா?”

அப்படி நிம்மதியாக இருக்க நினைத்தால்... அந்த நிம்மதியை அவனுக்குக் கொடுப்பதுதான்... தன் காதலுக்கு அர்த்தத்தைக் கொடுக்கும் என்று ராதா நினைத்தாள்.

காதலுக்காக... காதலை தியாகம் செய்ய முடியாது... காதலுக்காக... தன் ஏக்கத்தை... ஆசைகளைத் தியாகம் செய்தால் தப்பில்லை என்ற நினைவுடன் கண்மூடி உறங்கிப் போனாள் ராதா...

ஆனால்... அவளது கனவுகளில் யதுநந்தன் மட்டுமே வந்தான்... சிரித்தான்... அவள் மனதை வென்றான்...

## 15

நீண்ட வெண்மை நிற ஓவர் கோட்டை அணிந்து கொண்டு... கண்ணாடி டியூபினுள்... மைக்ரோஸ்கோப் மூலும் பார்த்துக் கொண்டிருந்தாள் ராதா...

''ராதா... உன்னைத் தேடி கெஸ்ட் வந்திருக்கிறாங்க...'' அவளது கைபேசியில் அழைத்து தகவல் சொன்னாள் ரிசப்சனிஸ்ட் சுனிதா.

''ரிசப்சன் ஹாலில் உட்கார வை சுனிதா... இப்போ டியூட்டி முடிந்து விடும்... வந்துவிடுகிறேன்...'' என்றாள் ராதா...

''ஓகேப்பா...'' சுனிதா போனை அணைத்துவிட்டாள்.

'யாராக இருக்கும்...' என்ற சிந்தனையடன் வேலையை முடித்துவிட்டு, லிஃப்டிற்குள் புகுந்தாள் ராதா.

ரிஷப்சனில் அவளுக்காக... கால்மேல்கால் போட்டு... தோரணையாய் சோபாவில் சாய்ந்தபடி காத்திருந்தான் யதுநந்தன்.

ராதா பெங்களூருக்கு வந்து பதினைந்து நாள்கள் ஆகிவிட்டன. இந்த இருவாரத்திலும் அவள் யதுநந்தனிடம் போனில் பேச முடியவில்லை. கடிதம் போடவில்லை அவனிட மிருந்தும் அவளுக்கு... போனோ... கடிதமோ வரவில்லை...

'சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான்...'

வேதனையுடன் நினைத்துக் கொண்டாள் ராதா....

அந்த சுதந்திரப் போராட்ட வீரன்... அவள் முன்னால் திடீரென்று வந்து நிற்பதை நம்ப முடியாமல் திகைத்துப் போய் நின்று விட்டாள் அவள்.

அவளை ஊடுருவிப் பார்த்தபடி... நிதானமாக எழுந்து அருகில் வந்தான் யதுநந்தன்.

"என்னை நினைவிருக்கிறதா மேடம்?"

'எப்படிக் கேட்கிறான்...' ராதாவிற்கு கண்களில் நீர் தளும்பியது.

"மறந்தால்தானே... நினைப்பதற்கு?"

"ஹ... பேச்செல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது... சொல்லாமல் கொள்ளாமல் சென்னையை விட்டு ஓடி வந்துவிட்டு வசனம் பேசுகிறீங்களா? இதை என்னை நம்பச் சொல்கிறீங்களா?"

'வாங்க... போங்கவா...' தன்னை அவன் அந்நியமாக்கி விட்டதாய் உணர்ந்தாள் அவள்.

"மரியாதையெல்லாம் பயமாயிருக்கு..." என்று முணுமுணுத்தாள்.

"வேறு என்ன செய்வது...? நீங்கள்தான் மகா மேதையாயிற்றே... மூளையைக் கசக்கிப் பிழிந்து ஆயிரம் யோசனைகளைக் கண்டுபிடிப்பீங்க... அதை என்னிடம் கூடச் சொல்லாமல் உடனே செயல்படுத்தி விடுவீங்க... நீங்க யாரு... உங்க லெவல் என்ன... உங்களைப்போய் 'வா... போ...'னு கூப்பிட்டால் அது மரியாதையாய் இருக்குமா?"

"நந்து..."

ராதாவின் நாத்தழுதழுத்த அந்த அழைப்பைக் கேட்டவன் அவளையே முறைத்துப் பார்த்தான்.

அவனது கோபம்... அவளுக்கு இதமாக இருந்தது. அவன் பேசிய வார்த்தைகளைக் கேட்டு... அவள் மனதில் சாரல் அடித்தது...

"வெளியே வாங்க மேடம்..."

"ப்ளீஸ்.. சாதாரணமாய் பேசுங்களேன்..."

"எதை... எப்போப் பேசணும்னு எனக்குத் தெரியும். நீங்க வாங்க..."

"எங்கே..."

"இதுதான் கார்டன் சிட்டியாச்சே... ஏதாவது ஒரு கார்டனில் போய் உட்கார்ந்து பேசலாம்."

"உட்கார்ந்து பேச... ஐ மீன்... என்னுடனெல்லாம் உட்கார்ந்து பேச... உங்களுக்கு அவகாசம் இருக்கிறதா நந்து?"

"கொழுப்பா?" அவன் அடிக்குரலில் சீறினான்...

'இது... இது... இதுதான் என் நந்து...' அவள் கண்ணீருடன் அவளது கோபத்தை ரசித்தாள்.

அருகிலிருந்த பூங்காவிற்குள் சென்று அமர்ந்த பின்னும் யதுநந்தன் பேசவில்லை... ராதா அவளது மௌனத்தைக் கலைக்க முயலவும் இல்லை...

அவன் தீவிரமான யோசனையில் இருந்ததை அவனது புருவச் சுளிப்பு காட்ட.... ராதா தன் கைவிரல்களைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தாள்... யதேச்சையாய் அவள் நிமிர்ந்தபோது... அவன் அவளையே பார்த்துக் கொண் டிருப்பதைக் கவனித்தாள்.

"நந்து..."

"வாய் ஓயாமல் பேசுவாயே... அந்தப் பேச்சு இப்போது எங்கே போனது ராதா?"

"உங்களுக்குத்தான் நான் பேசினால் பிடிக்காதே..."

"பிடிக்காமல்தான்... தினமும் உன்னைத் தேடி ஓடி வந்தேனா?"

"வந்தும் என்ன செய்தீங்க? மணியைப் பார்த்துக்கிட்டே உட்கார்ந்திருப்பீங்க..."

"நேரமில்லைன்னு சொல்வதையும் நேரே வந்துதானே சொன்னேன்... ஐந்து நிமிசம்ன்னாலும் உன் அருகிலிருக்க வந்து நின்றேனா இல்லையா..."

"என் காதல் உங்களுக்கு சுமையாயிருக்கும்னு நினைத்தேன் நந்து..."

"சுமையைச் சுமக்க முடியாத பலகீனமானவன் நானில்லை... அத்தோடு இது சுகமான சுமைடீ..."

'டீ...' என்று அழைத்து விட்டான். ராதாவின் மனம் பொங்கியது... யதுநந்தனுடன் நூறு வருடம் வாழ்ந்து விட்ட நிறைவை அடைந்துவிட்டால்... அவள்.

அவளது முகம் காட்டிய பரவசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு... மனம் நெகிழ்ந்தது. அவன் அவளருகே நெருங்கி அமர்ந்து... அவள் தோளைச் சுற்றி கை போட்டான்... ராதா நம்ப முடியாத ஆனந்த திகைப்புடன் அவன் தோள் சாய்ந்தாள்...

"ஏண்டி என்னை விட்டு ஓடி வந்தே?"

"நீங்க என்னை உங்கள் சுதந்திரத்தைப் பறித்துக் கொள்வதாய் சொல்லலாமா?"

"அப்படிப் பார்த்தால் நான் கூடத்தான் உன் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டேன்... என்னை முதன்முதலாய் பார்க்கும்போது உன்னிடம் இருந்த நிமிர்வு இப்போது இல்லையே... அது எங்கே போனது?

உன் உற்சாகமும்... கலகலப்பும் கூடத்தான் காணாமல் போயிருக்கிறது..."

"எனக்கு அவை எதுவும் வேண்டாம் நந்து..."

"நான் மட்டும்தான் வேண்டும்... அப்படித்தானே...?"

"அப்படித்தான்!"

"அப்புறமும் ஏன்... என்னை விட்டு விலகிப் போவதாகக் கடிதம் எழுதிவிட்டு ஓடி வந்தாய்? உன்னால் விலகிவிட முடியுமா?"

'அது எப்படி முடியும்?' ராதா விம்மினாள்.

"ச்சு... அழக்கூடாது... நமக்குள் நடந்த நிகழ்விற்கு இது தீர்வு இல்லை ராதா... கீதையில் என்ன சொல்லியிருக்கிறது? கடமையைப் புரிந்து கவலையை விடுன்னு சொல்லியிருக்கிறதா... இல்லையா?"

"ம்ம்ம்..."

"என்னைக் கண்ட நாள்முதல்... என்னைக் காதலிப்பது தான் உன் தலையாய கடமைன்னு நினைத்துக் கொண்டு இருக்கிறாயே... அந்தக் கடமையை விட்டு ஏன் நழுவப் பார்க்கிறாய்?"

அவன் வினவிய விதத்தில் ராதாவின் முகத்தில் புன்னகை வந்தது.

'இவன் இப்படித்தான் பேசுவான்... இவனால் இப்படித்தான் பேச முடியும்...' அவனது முகத்தை ரசித்துப் பார்த்தாள் ராதா...

"இந்தப் பார்வைக்கொன்றும் குறைச்சல் இல்லை... நீ காதலிக்கும் கடமையை மட்டும் செய்து கொண்டு இரு... பலன் தானாகக் கிடைக்கும்..."

"இது யார் சொல்லிய கீதை?"

"பகவான் கிருஷ்ணன் சொல்லியதும் இதைத்தான்..."

"ஓ... இது நீங்கள் சொல்வதா?"

"ஆமாம்... இது நான் சொல்லும் கீதைதான்... எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ருக்மணி வேண்டாம்... இந்த ராதாவே போதும்..."

"அப்போ... முரளி சொன்னது?"

"சொல்கிறவங்க... ஆயிரம் பேர் ஆயிரத்தைச் சொல்வாங்க... உனக்கெங்கே புத்தி... புல் மேயப் போனதா?"

"சும்மா என்னயே திட்டாதீங்க..."

"இந்த ரோசத்திற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை... உன்னை செவிட்டில் நாலு அறைவிடவேண்டும்னு நினைத்துத்தான் பெங்களூர் வந்தேன்..."

"அப்புறமும் ஏன் பேசாமல் இருக்கறீங்க?"

ராதா ஆசையுடன் கன்னம் காட்டினாள்... அதில் இதழ் பதித்தான் யதுநந்தன்.

"உலகத்திலேயே அடிவாங்க ஆசைப்படும் பெண் குல திலகம் நீ ஒருத்தியாகத்தான் இருப்பாய்டி..."

அவர்கள் வெகுநேரம் பேசினார்கள். ராதாவின் விரலோடு விரல் சோர்த்துப் பேசிய யதுநந்தன் திருமணத்தைப் பற்றிய எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை... அதைக் கேட்க வேண்டுமென்ற எண்ணம் ராதாவிற்கும் வரவில்லை...

அவளுடைய யதுநந்தன் அவளுக்கு திரும்பவும் கிடைத்துவிட்டான்... அவளுக்கு அதுபோதும்... என்று தோன்றிவிட்டது.

அந்த மாத இறுதியில் ராதா சென்னைக்குப் போனாள்... வேலை பார்த்துக் கொண்டு பிரிந்திருக்கும் மகளைச் சீராட்டிய மந்தாகினி. அன்று மாலை அவளை உடைமாற்றித் தயாராகச் சென்னாள்.

“எங்கே போகிறோம் அம்மா?”

“நாம் எங்கேயும் போகவில்லை... நம் வீட்டிற்குத்தான் கெஸ்ட் வருகிறாங்க...”

மாலையில் விருந்தினர் வந்து இறங்கிய போது... அந்த மர்மம் வெளிப்பட்டது...

யதுநந்தன் தன் பெற்றோருடன் அவளைப் பெண்கேட்டு வந்திருந்தான்.

‘என்... நந்து...!’ மீண்டும் கண்கள் நிறைந்து விட்டன ராதாவிற்கு...

அவள் காதினில் அன்று கீதை சொன்ன அந்தப் பிடிவாதக்காரன். சொன்னபடி... பலன்தர வந்து விட்டான்.

‘நான் கேட்காமலே கிடைக்கட்டும்...!’ என்று தவமிருந்தாள் ராதா... அவளது தவத்தை மெச்சி... அவளது காதலன் வரம் கொடுத்து விட்டான்.

முரளியிடம் யதுநந்தனும்... ராதாவும் சேர்ந்து சென்று திருமண அழைப்பிதழை நீட்டியபோது அவன் முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது.

தங்கையின் திருமணம் முடிந்த மறு வாரத்தில் ராதாவின் கையைப் பற்றி மணமேடை ஏறி... அவள் கழுத்தில் தாலி கட்டினான் - அவளுக்கு புதிய கீதை சொன்ன யதுநந்தன்.

முற்றும்


திருமகள்
நிலையம்